REGD M 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 19—9—48 | இதழ் 14

## குலைத்து விட்டனர்

—❀—

“எல்லா முனைகளிலும் நம் துருப்புகள் துரிதமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றன என்பது உண்மையே. இந்தியாவின் ராணுவ பலத்திற்கு இது ஓர் அத்தாட்சி. ஆனால் நாம் ராணுவபலம் உள்ளவர்களாக மாத்திரம் இருந்தால் போதாது. நம் மனச்சாட்சியும் பரிசுத்தமாக இருப்பது அவசியம். இந்தியா சாந்தத்தையே நாடும் தன் வழக்கத்திற் கேற்றபடி, ஹைதராபாத்துடன் நேசத்தொடர்பு வைத்துக்கொள்ள உறுதியுடன் நீண்டகால முயற்சி செய்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, ஹைதராபாத்தில் அதிகாரத்தில் உள்ளவர்கள் நம் வழக்கத்திற்குப் பரிச்சயமில்லாத ஒரு புதுச் சக்தியாவர். அமைதியான ஒரு சமரசத்திற்கு வரவேண்டுமென்ற நம் விருப்பத்தை அவர்கள் குலைத்துவிட்டனர்.

நான் அமைதியையே விரும்புகிறவன். இந்திய சர்க்கார் மிகவும் வருத்தத்துடன் தான் ஹைதராபாத் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.”

பண்டித நேரு

15—9—48

# ★ கட்டுக் கதைகள் ★

கட்டுக்கதைகள் இல்லாத நாடுகளே இந்த உலகத்தில் இல்லை. அறிவு வளர்ச்சியடையாத பண்டைக் கால மக்கள் இயற்கைப் பொருள்களின் உண்மைத் தோற்றங்களையும், காரணங்களையும் அறியாமல் பல திறப்பட்ட கட்டுக்கதைகள் எழுதிவைத்தனர். சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், கிரகணங்கள் முதலியவைகளைப்பற்றி நமது புராணங்கள் கூறும் கட்டுக்கதைகளை நாம் நன்கு அறிவோம்.

அவைகளைப் போன்ற கதைகள் மேனாடுகளிலும் இருந்தே வந்திருக்கின்றன.

### சூரியனும், சந்திரனும்.

சூரிய சந்திரர்களைப் பற்றி எஸ்கியுமோ ஜாதியாருக்குள் வழங்கும் ஒரு கதை வேடிக்கையாக இருப்பதுமன்றி மனோகரமாகவுமிருக்கிறது.

ஒரு பெண் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தாளாம். விருந்துண்ட பின்னர் இரவு நள்ளிருளில் எல்லாரும் கூடியாடி விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு இளைஞன் அந்நாட்டு வழக்கப்படி காதலைத் தெரிவிக்கும் பொருட்டு அப்பெண்ணின் தோளைப் பிடித்து அசைத்தானாம்.

இருட்டிலே தன்னைக் காதலித்தவன் யார் என்பதை அப்பெண்ணால் அறிந்துகொள்ள முடியவில்லை. உடனே அவள் ஒரு தந்திரம் செய்தாளாம்.

புகைப்போக்கியண்டை சென்று தன் கைகளில் கரியைப் பூசிக்கொண்டு கூட்டத்தில் கலந்து தன் காதலனைக் கண்டுபிடிக்க ஆயத்தமாயிருந்தாளாம். மீண்டும் அவளது காதலன் அங்கு தோன்றி அவளது தோளைப் பிடித்து அசைத்தானாம். உடனே அவள் அவனது கன்னத்தில் கரியைப் பூசிவிட்டாளாம். அப்பால் விளக்குக் கொண்டு வரப்பட்டபோது தன்னைக் காதலித்தவன் தன் தமையன் என உணர்ந்து உடல் நடுங்கி ஓட்டமெடுத்தாளாம்.

காதலுக்குக் கண்ணுண்டா? மூக்குண்டா? முறையுண்டா!

காதலனும் காதலியைத் துரத்திக்கொண்டு அவள் பின்னால் ஓடினான். காதலி அகப்படவில்லை; காதலனும் விடவில்லை. இவ்வண்ணம் இருவரும் வெகுநாள் ஓடிக்கொண்டே இருந்தனர். இறுதியில் காதலி பூமியின் எல்லையை அடைந்தாள். காதலனும் நெருங்கினான். வேறு வழியில்லை. காதலி வானமண்டலத்தில் குதித்து மறையத் தொடங்கினாள். காதலனும் அவளைப் பின்பற்றினான். வானமண்டலத்தை யடைந்ததும் காதலி சூரியன் ஆனாளாம்; காதலன் சந்திரனானாம். பின்னும் ஓட்டம் நிற்கவில்லையாம். இப்பொழுதும் சந்திரன் சூரியனைப் பின்தொடர்ந்து விரட்டிக்கொண்டே இருப்பதற்கு அவனது காதலே காரணமாம். காதலி தேய்த்த கரிக்கு அறிகுறியாகவே இப்பொழுதும் சந்திரன் முகம் மாதம் ஒருமுறை கரியமாக இருக்கிறதாம். டியூட்டணிக் (Tewtonic) பாஷைகளில் சூரியனைப் பெண்ணாகவும் சந்திரனை ஆணாகவும் வழங்குவது மரபு.

பிற்காலத்தில் சில தேசத்தார் சூரியனை ஆணாகவும் சூரியனுக்கு முன் தோன்றும உஷையைப் (விடிபொழுதை) பெண்ணாகவும் சூரியனை உஷையின் காதலனாகவும் அவன் அவளைப் பிடிக்கச் செல்வதாகவும் வழங்கியுள்ளார்கள்.

### நக்ஷத்திரங்கள்.

நக்ஷத்திரங்களைப் பற்றிய கதைகளும் மிகவும் வியக்கத்தக்கவைகளாகவே இருக்கின்றன. ஆசிய தேசக் கதையொன்று பின்வருமாறு:—

சூரியனும் சந்திரனும் பெண்களே, நாம் இப்பொழுது காணும் நக்ஷத்திரங்கள் எல்லாம் சந்திரனின் குழந்தைகள். சூரியனுக்கும் ஒரு காலத்திலே ஏராளமான குழந்தைகள் இருந்தன. சூரியன், சந்திரன் அவற்றின் குழந்தைகள் முதலியவைகளின் ஒளியை உலக மக்கள் தாங்கமாட்டார்கள் எனப்பயந்து தம் மக்களைக் கொன்றுவிடுவதென்று சூரியனும் சந்திரனும் தீர்மானித்தன. ஒப்பந்தப்படி சூரியன் தன் குழந்தைகளையெல்லாம் விழுங்கிவிட்டான். சந்திரன் தந்திரசாலி—தன் குழந்தைகளை விழுங்கவில்லை. சூரியன் தன் குழந்தைகளை விழுங்கு மட்டும், சந்திரன் தன் குழந்தைகளை வானமண்டலத்திலே ஒளித்து வைத்திருந்ததாம்.

சூரியன் தன் குழந்தைகளையெல்லாம் விழுங்கிய பிறகு சந்திரன் தன் குழந்தைகளை அழைத்ததாம். சந்திரனுடைய குழந்தைகளைக் கண்டதும் சூரியனுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. உடனே சந்திரனைக் கொல்லும்படி சூரியன் பாய்ந்தது. சந்திரன் ஓட்டம் பிடித்தது. இரண்டும் நெடுநாள் ஓடின. சில சமயங்களில் சூரியன் சந்திரனை நெருங்கிவிடுமாம். அப்பொழுதுதான் கிரகணம் உண்டாகிறதாம்.

அதிகாலையில் சூரியன் தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை விழுங்குவதை நாம் எல்லோரும் பார்க்கிறோம். சந்திரனோ தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை பகற்பொழுதில் ஒளித்துவைக்கிறது; இரவு சூரியன் வெகுதூரத்தில் இருக்கையில் தன் குழந்தைகளை வெளியில் கொண்டுவருகிறது.

### கிரகணங்கள்.

சூரிய சந்திர கிரகணங்கள் எல்லா நாடுகளிலும் மிகவும் பயங்கரமான உற்பாதங்களாகவே கருதப்படுகின்றன. கிரகணங்கள் உண்டாவதற்கு பேய் பிசாசுகளும் பூதங்களுமே காரணமென்று பல இடங்களில் நம்பப்படுகின்றன.

சூரியனையும் சந்திரனையும் விழுங்க முயலும் பூதங்களினாலே சூரிய சந்திர கிரகணங்கள் தோன்றுவதாக சீனர்கள் நம்புகின்றனர். எனவே கிரகண காலத்துப் பூதங்களை விரட்டியோட்டும் பொருட்டுத் தப்பட்டைகளையும் கொப்பறைகளையும் அடித்துச் சப்தமுண்டாக்குவார்களாம். இந்தியாவிலும் கிரகண காலங்களில் மணியடிப்பதுண்டு.

பெரிய நாய்கள் சந்திரனை விரட்டுவதினாலேயே சந்திர கிரகணம் உண்டாவதாக அமெரிக்க சுதேசிகள் நம்புகிறார்கள். வெண்ணிலா சிவப்பாகும்வரை நாய்கள் சந்திரனை விரட்டுமாம். நாய்கள் கடித்த காயங்களிலிருந்து இரத்தம் வடிவதனாலேயே விடியற்காலையில் வானமண்டலத்தில் சிவப்பு வர்ணம் தோன்றுகிறதாம்.

அறிவு விளக்கம் பெற்று, நாகரிகமடையாத தேசங்களில் எல்லாம் குருட்டு நம்பிக்கைகளும் கட்டுக்கதைகளும் இருந்தே வந்திருக்கின்றன. விஞ்ஞான சாஸ்திரம் விருத்தியடைய அடையக் கட்டுக்கதைகளும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்து விடுகின்றன இங்கே!

# ஹைதராபாத்

—✻—

இக்கட்டுரை, ஹைதராபாத்மீது இந்திய யூனியன் போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு முன் இருந்த நிலைமையை விளக்குகிறது.

இந்த வருஷம் (1948) ஜூலை மாதத்தின்போது, பிரிட்டிஷ் கன்சர்வேடிவ்கள், பிரிட்டிஷ் தொழிற் கட்சி மந்திரி சபையை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் கவிழ்த்துவிடலாமென்று எதிர்பார்த்தார்கள். இதற்காகவே, பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி நிஜாமைக் கொஞ்ச நாளைக்குப் 'பாச்சு'க் காட்டிக் கொண்டிருக்கும்படி கேட்டுக்கொண்டது.

இத்தகைய ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம், காமன்ஸ் சபையில் நிறைவேறிவிடுமென்று அவர்கள் எண்ணியதற்குப் பல காரணங்கள் உண்டு—பிரிட்டனில் வரவரச் சீர்கேடடைந்து வரும் பொருளாதார நிலைமை, கடுமையான குளிர் காலம், உடை, உணவு ஆகியவற்றின் பற்றுக்குறை, நிலக்கரிச் சுரங்கங்களைத் தேசிய மயமாக்கியது ஆகிய எல்லாம்தான். பிரிட்டிஷ் பொதுமக்கள் இதையெல்லாம் சமாளித்துக்கொண்டு, வாழ்வது முடியாதென்றும், பிரிட்டிஷ் தொழிற் கட்சி மந்திரி சபை இறுதியாகக் கடந்த ஜூலையில் விழுந்துவிடுமென்றும் கன்சர்வேடிவ்கள் நம்பினார்கள்.

சர்ச்சிலின் திட்டம் (மாங்டன் தயாரித்துக் கொடுத்தது), கன்சர்வேடிவ்கள் அதிகாரத்துக்கு வருவார்களானால், ஹைதராபாத்தை மூன்றாவது டொமினியனாக ஆக்கி, நிஜாமையே அதற்குக் கவர்னர் ஜெனரலாக நியமித்து விடுவதுதான். (ஆனால், நிஜாம் என்கிற பட்டம் மட்டும் அப்படியே இருக்கும்.)

இதற்குக் கைமாறாக நிஜாம், கன்சர்வேடிவ் கட்சியின் உபயோகத்துக்காகப் பத்து லட்சம் ஸ்டர்லிங் பவுன் சர்ச்சிலுக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார். இந்தத்தொகை ஏற்கெனவே பட்டுவாடா ஆகிவிட்டது.

இந்தப் பின்பலத்தை வைத்துக் கொண்டுதான், சர்ச்சில் சமீபத்தில் காமன்ஸ் சபையில் பேசினார். கன்சர்வேடிவ் கட்சி நிதிக்காக இவ்வளவு தாராளமான ஒருதொகையை அளித்த நிஜாமுக்கும், ஹைதராபாத்துக்கும் தாம் நன்றி செலுத்த வேண்டும் என்று சர்ச்சில் எண்ணியிருக்கலாம்.

ஜின்னா ஒருபிரத்தியட்சவாதியானதையால், ஹைதராபாத்துக்கு ஆயுதங்கள் 'சப்ளை' செய்ய இடைவிடாது மறுத்து வந்திருக்கிறார். பாகிஸ்தானின் பாதுகாப்புக்காக—அதுவும், பட்டாணியர்கள் கிளர்ச்சி செய்துவரும் வடமேற்குஎல்லைப்புற மாகாணத்துக்காக — கிடைக்கக்கூடிய ஒவ்வொரு துப்பாக்கி ரவையும் அவருக்குத் தேவையாயிருக்கிறது.

முடிந்தவரை காலத்தைத் தள்ளிக் கொண்டே போகும்படி பிரிட்டிஷ் கன்சர்வேடிவ்கள் நிஜாமுக்குச் சொல்லிக்கொடுத்த யோசனையைத் தொடர்ந்துதான், ஹைதராபாத்தில் நமது ஏஜண்டு ஜெனரலாக இருக்கும் ஸ்ரீ கே. எம். முன்ஷி இந்தப் பிரச்னையை மிக விரைவாக—எல்லோரும் எதிர்பார்த்ததை விட விரைவாக—பலப் பரீட்சை செய்து பார்த்தார்; அதிகார பூர்வமாக ஒரு முடிவும் செய்தார்.

ஹைதராபாத்துக்குள் பிரவேசிப்பதற்குப் பண்டித நேரு தயங்குகிறாரென்று தெரிகிறது. ஏனெனில், சர்வதேசச் சட்டங்களுக்கு அவர் மதிப்புக் கொடுக்கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் சம்பிரதாயங்களை முறிப்பதைக் கூடுமானவரை தவிர்க்கவே அவர் முயலுகிறார்.

ஹைதராபாத்தைப் பொருளாதார முற்றுகையிட்டிருப்பது அப்படியொன்றும் முக்கியமானதல்ல; இதற்குப் பிரமாதமான காரணம் இந்த முற்றுகை மிகவும் தாமதித்து வந்திருக்கிறது என்பதே. இந்த முற்றுகையைச் சக்தி வாய்ந்ததாகச் செய்யப் பண்டித நேரு உத்தேசித்திருந்தாரானால், தமது பேச்சொன்றில் இதைப்பற்றி அவர் எச்சரிக்கை விடுத்திருக்கக்கூடாது. இந்த எச்சரிக்கை, நிஜாம் தம் உற்பத்திச்செல்வங்களையெல்லாம் சேகரித்து தயாராக வைத்துக்கொள்ள அவகாசம் கொடுத்துவிட்டது.

மேலும் ஹைதராபாத் மக்களில் எண்பது சத விகிதத்தினர் இந்து விவசாயிகள். முற்றுகை இருக்கிறதோ இல்லையோ, இவர்கள் 'கைக்கும் வாய்க்கும்' என்கிற வாழ்க்கைதான் வாழ்கிறார்கள்; இவர்கள் அவ்வளவு ஏழைகள்.

இந்த முற்றுகை, சிறிய கைத்தொழில்களைப் பாதித்திருக்கிறது. என்றாலும், ஹைதராபாத்தில் வைத்திய மருந்துப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை இன்னும் ஒருவருஷத்துக்குக் காணும். ஐந்து மாதத்துக்குக் காணக்கூடிய அளவு "பிளீச்சிங் பௌடரும்" ஹைதராபாத்தில் இருக்கிறது. அகதிகள்முகாம்களும் சாக்கடை வசதிகள் சரியாக இல்லாததும்தான் அங்கே காலரா வியாதி கிளம்பக் காரணமாயிருந்தன.

நிலுவைப் பாக்கிகளைத் தேக்கி வைத்திருப்பது, ஹைதராபாத்துக்கு நல்ல அடிதான். ஆனால், இதுசென்ற பிப்பிரவரிமாதமே செய்யப்பட்டிருந்தால், இந்த அடி இன்னும் பலமாக இருந்திருக்கும். அப்போது ஹைதராபாத்தே விழுந்திருக்கும்.

ஹைதராபாத்துக்கு இப்போது ஐந்துவெடி மருந்து உற்பத்தி செய்யும் இடங்கள் சொந்தமாக இருக்கின்றன. தளவாடங்களும் வெடி மருந்துகளும் உற்பத்தி செய்யும் 'பிராகா ஆயுதக்கம்பெனியும்' இவற்றில் ஒன்று.

ஏற்கெனவே, நான்கு அல்லது ஐந்து விமானக் கப்பல்கள் வெடி மருந்துகளைநிரப்பிக்கொண்டுஹைதராபாத்துக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. சென்ற ஆகஸ்டுமாதம் (1947) முஸ்லிம்கள் சேகரித்துவைத்திருந்த வெடி மருந்துகள் பெருத்த அளவில் ஹைதராபாத்துக்குஅனுப்பப்பட்டு, பத்திரமாகப் பாது காக்கப்படுகின்றன. இந்தப்பொருள்கள் ஔரங்காபாத் வழியாகத்தான் சென்றன.

ஹைதராபாத் விவகாரத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கும் சுவாரஸ்யமானது. ஹைதராபாத்தில் தாங்கள் ஆதிக்கம் கொண்டுவிட்டால், பின்னர் மத்திய இந்தியாவில் மையமான ஒருவலுத்த பிடிப்பை ஏற்படுத்திக்கொள்ளலாமென்று கம்யூனிஸ்டு

கள் நம்பினார்கள். ஏற்கெனவே ஆந்திராவிலும், மலையாளத்திலும் அவர்களுக்குப் பெரிய பிடிப்பு இருக்கிறது. ஹைதராபாத்தும் இத்துடன் சேர்ந்ததானால் பிறகு அவர்கள்செல்வாக்குத் தானாக வளர்ந்துவிடுமல்லவா?

கம்யூனிஸ்டுகளுக்கு நிஜாம் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டினார். சட்ட விரோதமானவர்களாகப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் தலைமறைவாகவே இருப்பார்கள் என்பது அவர் அறிந்ததே. எனவே, அவர்கள் மீதிருந்த தடையை நீக்கி, அவர்களை வெளியே தலைகாட்டச் செய்தார். பிறகு அவர்கள் மீது கவைக்குதவாத குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அவர்களைத் தலையிலடித்தார். கம்யூனிஸ்டுகள் இப்போது இதை உணர்ந்துவிட்டார்கள். அவர்களது எதிர்காலத் திட்டம் இப்படித்தானிருக்கும்; அதாவது, இப்போதைக்கு மறுபடியும் தலைமறைவாகப் போய், இந்தியாவுக்கும் ஹைதராபாத்துக்கு மிடையே ராணுவத் தகராறு கிளம்பும் வரை காத்திருப்பது; இதற்குப் பிறகு, —அவர்கள் கணக்குப்படி — ஒரு ஆறுமாத காலத்துக்காவது புனருத்தாரண வேலைகள் இருக்கும். இந்தச் சமயத்தில், மீண்டும் வெளியே வந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயி மக்களிடையே தங்கள் செல்வாக்கைப் பரப்பிக்கொள்வது. அப்போது அவர்கள் கம்யூனிஸ்டுகள் என்கிற ஹோதாவில் காங்கிரசை எதிர்க்கமாட்டார்கள். ஆனால் விவசாயச் சீர்திருத்தவாதிகள் என்கிற போர்வையில் எதிர்ப்பார்கள். அத்தகைய ஒரு நிலைமை ஏற்படும் வரை, ஹைதராபாத்தைப்பொறுத்த மட்டில், வாலைச் சுருட்டிக்கொண்டு இருப்பதே அவர்களது திட்டம்.

இந்தியாவுக்கும் ஹைதராபாத்துக்கு மிடையே ராணுவ நடவடிக்கைகள் எழுமானால், நிஜாமினால் இரண்டு மாத காலத்துக்கு மேல் 'தாக்குப் பிடிக்க' முடியாது. ஏற்கெனவே, பொருளாதார ரீதியில் அவர் அடிப்பட்டுக் கிடக்கிறார்; அவரது வருமானங்கள் சுருங்கிவிட்டன; செலவோ வானளாவ உயர்ந்துவிட்டது. விளைச்சல் குறைந்துவிட்டதன் பலனாக அவரது நிலவரி வருமானம் வழக்கமான தொகையில் கால் பாகம் தான் வந்திருக்கிறது. வழக்கமான விளைச்சலில் 16 சத விகிதம் தான் இப்போது கண்டிருக்கிறது. சுங்கவரிகளின் மூலம் அவருக்குக் கிடைத்து வந்த ஏழு கோடி ரூபாய் வருமானம் இப்போது பூஜ்யமாகப் போய்விட்டது. இப்போது, வருமான வரியைவிதித்துக்கொண்டு வருகிறார். ஆனால், அவரது செலவுக்கு இது போதவே போதாது.

ஆகஸ்டு மாதம் மூன்றும் தேதியன்று, இந்திய யூனியனில் சேருவதாக நிஜாம் ஒரு கடிதத்தில் எழுதிக் கையெழுத்திட்டு, இந்தியாவில் இருக்கும் தமது ஏஜண்ட் ஜெனரலிடம் அதைச் சேர்ப்பித்தார். (அப்போது ஹைதராபாத்தின் ஏஜண்ட் ஜெனரல் ஜயின்யார் ஜங்.) அடுத்த நாள் காலை அவர் அந்தக் கடிதத்துடன் புதுடில்லிக்குப் பிரயாணமாக இருந்தார். ஆனால், அதற்கு முன்பு, காசிம் ராஜ்வி ஆயுதம் தாங்கிய 25 ராஜாக்கர்களுடன் ஏஜண்ட் ஜெனரலிடம் சென்று, துப்பாக்கி முனையில், நிஜாமினால் கையெழுத்திடப்பட்ட அந்த உடன்பாட்டுக் கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்!!

நிஜாம் இப்போது இந்திய யூனியனில் சேருவதற்கு இஷ்டப்படுகிறாரென்றும், ஆனால் காசிம்ராஜ்வி, அவரது ரஜாக்கர்கள் ஆகியோரின் கையிலே முழுக்க முழுக்கச் சிக்கியிருக்கும் காரணத்தால் அப்படிச் செய்யச் சக்தியற்றவராக இருக்கிறாரென்றும் நமக்குத் தகவல்கள் வருகின்றன.

லைக் அலி தாம் பிரதமராவதற்காகக் காசிம் ராஜ்விக்கு 3,00,000 ரூபாய் கொடுத்தாரென்றும் நமக்கு வந்த தகவல் கூறுகிறது. லைக் அலி ராஜினாமாச் செய்தார் என்பது உண்மையல்ல. அவர் ராஜினாமாவைக்கொடுத்தது வாஸ்தவம்; ஆனால் அது ஏற்கப்படவில்லை. லைக் அலி தான் ரஜாக்கர்களுக்குப் பண உதவி அளிப்பதாகக் கூறப்படுகிறது.

இதுவே நமக்குக் கடைசியாக வந்த செய்தி. ஹைதராபாத்தின் தற்போதைய நிலையைத் தெளிவாக்கும் பொருட்டு இதை இங்கே பிரசுரிக்கிறோம்.

(காலச்சக்கரம்)

# 'இரணியன் அல்லது இணையற்றவீரன்'
## தடையைமீறி நடித்தனர் தோழர்கள்
## மூன்று மாதமும் மூன்று வாரச் சிறைத் தண்டனையும்

"இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தை நடித்த காஞ்சிபுரம் தோழர்கள் சம்பந்தன், கிருஷ்ணமூர்த்தி, நாராயணசாமி, கச்சபாலயம், எத்திராஜ், மார்க், சுப்பிரமணியம், சண்முகம், கணபதி, கோபால், இராசமன்னார், திருவத்திபுரம் பூங்காவனம், ஆகியவர்களுக்கு வந்தவாசி சப்மாஜிட்ரேட் கோர்ட்டில் மூன்றுமாதக்கடுங்காவலும் ரூபா 50—0—0 விதம் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்ததால் மேற்கொண்டு மூன்றுவாரம் சிறைவாசம் கிடைத்தது. தண்டனை அடைந்த தோழர்கள் அனைவரும் மலர்ச்சியுடன் சிறைக்கூடம் சென்றனர்.

வழக்கு விசாரணையின்போது, 143 ஐ. பி. சி. செக்ஷன்படியும், 1876-ம் ஆண்டு டிராமா ஆக்டு 19-வது ஆக்டு 6-ஏ செக்ஷன்படியும் குற்றவாளியாகிறீர்கள். இதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள் என்று நீதிபதி கேட்டார்.

பூங்காவனம்: அந்த நாடகத்தில் என்ன குற்றம் கண்டு சர்க்கார் தடை விதித்தனர்.

நீதிபதி: அது சர்க்காருக்குத் தான் தெரியும்.

பூங்காவனம்: அப்படியானால் சட்டத்தை மீறவே நடித்தோம்.

சம்பந்தன்: தெரிந்துதான் ஆடினோம்.

கச்சபாலயம்: சட்டம் போட்டதே தப்பு; அதை உடைக்கவே நடித்தோம்.

நாராயணசாமி: எங்குமே இல்லாத இந்த சட்டத்தை உடைக்கத் தான் ஆடினோம்.

தோழர் எத்திராஜ்: தடை விதித்தது தெரியும். குற்றத்தைச் சர்க்கார் தெளிவுபடுத்த வில்லை. அதைப் பொதுமக்களுக்கு விளக்கவே ஆடினோம்.

இந்தவிவாதத்துக்குப்பின்னர்நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

# நல்லாட்சியூர் நோக்கி

இரவு, பகலாகும் அளவுக்கு ஒளிவிடும் நவரத்னக் குவியல் ஒரு புறம்!

பகல், இரவாகும்படியான தூளி கிளம்பிற்று மற்றோர் புறம்!

மேன்மை தங்கியவர்! மேதினியின் மிகப் பெரும் செல்வவான், என்ற விருதுகள் பொறிக்கப்பட்ட பட்டயங்கள் ஒருபுறத்தில் உள்ளன.

நமது படைகள் சிதறிப் பின்வாங்கின! நமது சுபேதார் வெள்ளைக்கொடி காட்டி, சரண் புகுந்து விட்டார், என்ற செய்திச் சுருளைகள் இருந்தன மற்றோர் புறத்தில்!

சிகந்தராபாத் நகரை நோக்கி, வெற்றி வீரர்கள் விரைந்து சென்ற வண்ணம் உள்ளனர் என்று செய்தி, வந்தது.

ராஜதந்திரிகள், காகிதச் சுருணைகளைச் சுமந்துகொண்டு, பாரிஸ் செல்கிறார்கள், என்று வேறோர் செய்தி வந்தது.

ரஜாக்கர்கள் புறமுதுகிட்டு ஓடுகிறார்கள், என்று செய்தி கிடைத்தது.

ரஜாக்கர் படையை நம்புங்கள், என்று ரஜ்வி கூறினார், ஒருபுறம் நின்றபடி.

*ஹைதராபாத் மக்கள், ஹைதராபாத்தைக் காப்பாற்ற நிஜாமுக்கு ஆதரவு தருவார்கள் என்று தர்பார் தளுக்கர்கள் கூறினார்கள், ஓர் புறம்.*

*ஹைதராபாத்தை, எதேச்சாதிகாரக் கொடுமையினின்றும் விடுவிக்கவும், ரஜாக்கர்களின் அட்டூழியத்தை அடக்கவும், வரும் படை வீரர்களை, ஹைதராபாத் மக்கள், பாலும் பழமும் கொடுத்து உபசரித்து வரவேற்று, விடுதலை விழாக் கொண்டாடுகிறார்கள், என்ற செய்திகள் வந்து குவிந்தவண்ணம் இருந்தன, மற்றோர்புறம்*

*துதி பாடகர்கள் தூபமிட்டனர்.*

*நிலைமையை அறிந்தவர்கள், எச்சரித்தனர்.*

*சமர்! சமர்! என்று கொக்கரித்தனர். விளைவு தெரியாத விஷமிகள்.*

*சமரசம்! சமாதானம்!—என்று தெளிவுரை கூறினார்கள், மக்களின் நலனைக் கருதுவோர். அரண்மனையில் உள்ள நிஜாம், அமளி நடக்கும் நாட்டுக்கு அதிபராக உள்ளார் – அவருக்கு, நாட்டு நிலையும், காலத்தின் நிலையும் தெரிய ஒட்டாதபடியும், மனம் குழம்பும் படியுமான, செய்திகள் தரப்பட்டன.*

*இருநூற்றாண்டுகளாக இந்த அரசு, நமது வம்சத்தவருக்குச் சொந்தமாக இருந்ததே, எப்படி இதை இழப்பது என்று ஆசை பேசிற்று.*

*இதைவிடப் பழமையானதும் பெரியதும், பலம் கொண்டதுமான அரசுகள், ஜனசக்தியின் முன்பு தாக்குப் பிடிக்க முடியாமல், அழிந்தன என்பது நினைவிலே இருக்கட்டும்—என்று வரலாறு, அவரை எச்சரித்தது.*

*அசாப்ஜா வம்சம்! அதைக் கவனி! பெரிய ராஜ்யம், அதை மறந்துவிடாதே! நிஜாம் பட்டம்! அதன் கீர்த்தியை இழக்காதே! – என்று பதவி மோகினி பேசினாள்.*

*தக்காணத்திலே, கவர்னராகத் தானே நியமித்தோம், உன் முன்னோரை. மொகல் அரசுக்கு ஏஜண்டாக அனுப்பினோம். மொகல் அரசுக்குத் துரோகம் செய்து, தனி அரசு என்று கூறினாய் – நிஜாம் என்று பட்டம் கொண்டுவிட்டாய்– உன் அரசின் அடிப்படை, துரோகம் – அது நிலைக்காது – நினைத்துப் பார் பழங் கதையை – என்று, டில்லி பாதுஷாக்களின் கல்லறையிலிருந்து, சத்தம் கிளம்பிற்று.*

*ஐதராபாத் நிஜாம், மேலும் மேலும் குழப்பமடையக்கூடிய சேதிகள் – சிந்தனைகள் – நிலைமைகள் – தெளிவுபெற மார்க்கம் இல்லாமல் இருந்தது.*

*அந்த அளவுக்கு அவர், சூழ்நிலையைக் கெடுத்துக் கொண்டார் – சுய சிந்தனைக்கும் இடமின்றி ஆக்கிக் கொண்டார் – சூறாவளி வீசத் தொடங்கிய பிறகே, தமக்குள்ள உண்மையான ஆற்றல் மிக மிகக் குறைந்த அளவுதான், என்பதை உணர முடிந்தது.*

**கடைசியாக, ஐதராபாத் மீது இந்திய யூனியன் போலீஸ் நடவடிக்கை எடுத்த ஐந்தாம் நாள் (17—9—48) நிஜாம் தம்முடைய தவறை உணர்ந்து, இந்தியயூனியனிடம்சரண் புகுந்துவிட்டதென்ற மகிழ்ச்சிகரமான செய்தி கிடைத்திருக்கிறது.**

*நிஜாம் தம்முடைய பலத்தை உணராமல், இந்திய யூனியன் நடவடிக்கை எடுக்குமளவுக்குத் தம்முடைய போக்கை மாற்றாமல் இருந்தது ஏன்?*

* * *

*பிரிட்டிஷார், நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே, ஐதராபாத் நிஜாமுக்கு, ஒருவிதமான பித்தம் உண்டாகும்படி செய்துவிட்டார்கள்.*

*மற்ற மன்னர்களிடம் காட்டி வந்த மதிப்பை விடவும், கொடுத்த அந்தஸ்த்தை விடவும், அதிகமான அளவு, ஐதராபாத் நிஜாமுக்குத் தந்து, அவர் ஏதோ, தங்களுக்குச் 'சரி சமமானவர்' என்ற தப்பெண்ணம் ஏற்படும்படி நடந்துகொண்டனர் பிரிட்டிஷார்.*

*உண்மையோ, வேறு. ஐதராபாத் நிஜாம், மொகல் அரசு இருந்த வரையில் மொகலாய சக்ரவர்த்திக்கு உட்பட்டவராக இருந்தார்— டில்லியில் பாதுஷாவின் ஆட்சி போய், பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கியவராக இருந்துவந்தார்.*

*துவக்கத்திலே இருந்து ஒருதனி, சுதந்திர ராஜ்யமாக, ஐதராபாத் இருந்ததில்லை — இருக்கும்படியான இயற்கை அமைப்பேகூடக் கிடையாது.*

*நிஜாம் என்ற சொல்லுக்கே, (உருது மொழி) கவர்னர், என்ற பொருள்தான் உண்டே தவிர, அரசர் என்ற அந்தஸ்த்து தரும் பொருள் கிடையாது, ஆரம்ப*

முதல், நிஜாமுக்கு இருந்துவந்த நிலையும், வேறோர் பேரரசுக்குக் கீழ் ஏஜண்டு முறையில் உள்ளதேயன்றித் தனியானதுமல்ல; சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போன்றதுமல்ல.

பிரிட்டிஷாரின் பிடி இங்கே ஏற்படுவதற்கு முன்பிருந்தே, மொகலாட்சியின், அதிகாரி என்ற நிலைமட்டுமே இருந்துவந்தது, ஹைதராபாத் நிஜாமுக்கு.

அந்த நாட்களிலிருந்தே, ஹைதராபாத் மண்டலம், தங்களுடையது என்றஎண்ணம், மராத்தியர்களுக்கு உண்டு — பலமுறை, அவர்கள், ஐதராபாத்தை மீட்கப்போரிட்டதுமுண்டு.

ஐதராபாத்துக்கு நிஜமாக முதன்முதல் அமர்ந்த, அசாப்ஜா "மராட்டியர்களுடன் நேசமாக இருக்க வேண்டும்—அவர்களே இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள்" என்று தெரிவித்திருக்கிறார் – அந்தப் பட்டயம் இன்றும், சமஸ்தான நிலையத்தில் இருக்கிறது.

சமஸ்தானத்தின் ஆரம்பம் இதுவென்றால், நிர்வாக சம்பந்தமாக எடுத்துக்கொண்டாலோ, துவக்க முதல், அந்தத் துரைத்தனத்தைப் பலரும் கண்டித்திருக்கிறார்களேயொழிய, பாராட்டினவர்கள் இல்லை.

1883ல், நிஜாம் சமஸ்தானத்தில் மந்திரியாக லேயிக் அலி என்பவர் இருந்தார்–அவர் நிஜாம் சுயேச்சையாக ஆளும் தகுதி படைத்தவர் அல்ல—என்று அப்போது கூறினார்.

இப்போது, ஒரு லேயிக் அலி மந்திரியாக இருக்கிறார்–இவர் காலத்திலே, நிஜாம், தனியாக ஆட்சி செய்யக்கூடியவர் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

நிஜாம் ஆளுகிறார் — ஆனால் அவரை, ஒரு ரஜ்வி ஆட்டிவைக்கிறார்.

இந்த ரஜ்வி, சமஸ்தானத்திலே ஏதாவது மந்திரியா, என்றால் அதுவுமில்லை. மந்திரிகள் வேறு இருக்கிறார்கள்.

மன்னர் நான் என்று கூறிக்கொண்டு ஒருவர் இருக்க, மந்திரிமார்கள் என்று ஒருகூட்டம் இருக்க, இந்த ரஜ்வி, என்ற தனி நபருக்கு, நிஜாமின் நினைப்பை மாற்றவும், ஐதராபாத்தின் போக்கை மாற்றவும், ஏன், எப்படி, அதிகாரம் கிடைத்தது?

சமஸ்தானத்திலே, பதவியும் வகிக்காத நிலையில், சமஸ்தானத்தின் சார்பாக, நிஜாமைவிட அதிகாரத் தொனியில் பேசவும், ஆயுதம் தாங்கி, அக்ரமத்தைத் துணைகொண்டு நடமாட, ஒரு படையை ஏற்படுத்திக் கொள்ளவும், ஒரு தனி நபருக்கு—காசிம் ரஜ்விக்கு—வசதி ஏற்பட்டதொன்றே போதும், ஐதராபாத் சர்க்கார், திறமையுமற்றது, என்பதை நிரூபிக்க.

எத்தகைய நாகரிக சர்க்காரிலும், ஆயுதம் தாங்கி அமுல் நடத்தும் படை, தனிப்பட்டவர்களிடம் இருக்க அனுமதிக்கமாட்டார்கள்—அது காட்டுமுறை என்ற காரணத்தால். ஆனால் ரஜாக்கர்படை, ஐதராபாத் சமஸ்தானத்தில் தங்குதடையின்றித்தர்பார் செய்கிறது—இத்தகைய படையினால் மக்கள் படும் அவதியைக் கண்டு, இப்படி ஒரு படை இருக்கக்கூடாது, கலைத்து விடுக, என்று யோசனை கூறினால், நிஜாம் கேட்க மறுக்கிறார்—ரஜாக்கரின் கொக்கரிப்பு அதிகரிக்கிறது.

ஐதராபாத், இதுநாள் வரையில் ஏதோ, தனிராஜ்யமாக, இருந்து வந்தது போலவும், இப்போது சுதந்திரத்தை இழக்க மனமின்றி, உரிமையைக் காப்பாற்றிக்கொள்ளக் கிளம்பியிருப்பதாகவும் எண்ண வேண்டுமென்று, ஐதராபாத், பிரசாரம் செய்து பார்க்கிறது.

வரலாறு தெரிந்த யாரும், இந்தப் பிரசாரத்தால் ஏமாறமாட்டார்கள்—தெளிவாகத் தெரியும் ஐதராபாத் எப்போதுமே சுதந்திர நாடாக இருந்ததில்லை என்பது.

அதுமட்டுமல்ல — ஐதராபாத், ஒரே நாடு என்று கூடக் கூறமுடியாது—பல நாட்டுச் சிறுசிறு துண்டுகளை, மொகலாயர் காலத்தில், களத்திலேயும் கலக மூலமும், இணைத்த ஒரு இடமே தவிர, கலாச்சாரம், மொழி, இனம், எனும், எந்த ஆதாரத்தைக்கொண்டு பார்த்தாலும், ஐதராபாத் ஒரேநாடு என்று கூற முடியாது.

பம்பாய் மாகாணத்தோடு, இயற்கையாகச் சேரவேண்டிய பகுதி, மத்திய மாகாணத்தோடு இயற்கையாகச் சேரவேண்டிய பகுதி, ஆந்திர நாட்டுடன் இயற்கையாகச் சேரவேண்டிய பகுதி, என்ற இம் முறையிலேதான் ஐதராபாத் சமஸ்தானம் இருக்கிறதே தவிர, ஐதராபாத் நாடு—அதற்கென ஒரு தனி மொழி, ஒருதனிக்கலாச்சாரம், ஒரு தனி இனம், இருப்பதாக, யாரும் கூறமுடியாது.

ஏதாவதொரு ஜில்லாவுக்கு யாரேனும் ஒருவர் கலெக்டராக இருக்க நேரிடுவதால், அந்த ஜில்லா எப்படி, அந்தக் கலெக்டருடைய இனத்துக்கோ, பரம்பரைக்கோ சொந்தமாகிவிட முடியாதோ, அதுபோலத்தான், ஐதராபாத்தும், அசாட்ஜா வம்சத்தின் பாரம்பரிய சொத்து ஆகிவிட முடியாது.

திருவிதாங்கூர், கொச்சி முதலிய நாடுகள், சேரநாட்டின் பகுதிகள், சேர பரம்பரை என்பது பிறகு கோளம் என்றாகிவிட்டது, என்பதாக வரலாறு கூறுவதுபோலவோ, திராவிட நாடு என்பது திராவிடர்களின் சொந்த இடம், அது பிரிட்டிஷ் பிடிக்கு முன்பு, தனி நாடாகவே இருந்துவந்தது என்று வரலாற்று ஆதாரம் கூறுவதுபோலவோ, ஐதராபாத் விஷயத்திலே கூற, எந்த வகையான ஆதாரமும் கிடையாது.

இந்நிலையிலே, ஐதராபாத் ஏதோ, முஸ்லீம் நாடுபோலவும், அது தனிச் சுதந்திர நாடாக இதுநாள்வரை இருந்துவந்ததுபோலவும், இப்போது அந்தச் சுதந்திரத்துக்கு, ஏதோ குந்தகம் ஏற்படுவது போலவும், ஐதராபாத் பிரசாரம் செய்வது ஐதராபாத்துக்கு வெளியே உள்ள முஸ்லீம்களில் விவரமறியாதவர்களின் மனதை மயக்கலாம் என்ற தன்னலத் தந்திரமே ஒழிய வேறில்லை. இதை நம்நாட்டு முஸ்லீம்கள், நன்றாக அறிவார்கள். முஸ்லீம் லீகின் தலைவர் இஸ்மாயிலும், அறிவுரை கூறி, "இந்திய சர்க்காருக்குப் பக்கபலமாக இருங்கள்" என்று முஸ்லீம்களுக்கு எடுத்துக் கூறி இருக்கிறார்.

பண்டித நேருவும், விளக்கமாகவும், மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும், ஹைதராபாத் விவகாரம், வகுப்பு விவகாரமல்ல—இந்து முஸ்லீம் பிணக்குப் பிரச்னை அல்ல—ஒரு எதேச்சாதிகார ஆட்சி, அதற்குத் தூபமிடும் ஒரு காட்டுமிராண்டிப் படை, இவைகளின் பிடியிலிருந்து சட்டம், சமாதானம் ஆகியவற்றையும், ஜனநாயகத்தையும் விரும்பும் இந்து முஸ்லீம்கள் அனைவருக்கும், விடுதலை பெற்றுத்தரும் முயற்சியே இது—இதனை எந்த விஷ

மியும் வகுப்புப் பிரச்னையாக்கிவிடக் கூடாது, என்று தெளிவுரை கூறியிருக்கிறார்.

ஐதராபாத் சுதந்திர நாடாக இருந்ததே இல்லை; அது முஸ்லீம் நாடுமல்ல, அது ஒருதனிநாடு எனும் இலட்சணம் கொண்டதுமல்ல, என்பதோடு, நாம் கூறுவோம், அங்கு நடப்பது இஸ்லாமிய ஆட்சியுமல்ல-சாந்தியும்சமாதானமும், நீதியும் நேர்மையும் இன்றி இஸ்லாம்—ஹைதராபாத்தில் கொலையும் கொள்ளையும், ஆதிக்க வேட்டையும் நடைபெறுகிறது—இதை யாரும் இஸ்லாமிய ஆட்சி என்று கருதிவிட முடியாது.

இவைகளுக்கு மேலாக, இன்னொன்றும் உண்டு—முற்போக்குச் சக்திகளுக்கும் எண்ணங்களுக்கும் இடமளிக்க மறுத்து, பழையதர்பார் போக்கிலே நடந்துகொண்டு, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க மறுக்கும் ஆட்சி அங்கு நடைபெறுவது.

எனவேதான், ஹைதராபாத்பிரச்னையில், எந்தக் கட்சியினராயினும், காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சி முறையிலும், போக்கிலும் அதிர்ப்தி கொண்டவர்களாயினும், ஒன்று சேர்ந்து, இந்திய சர்க்காரின் முயற்சியை வரவேற்று, ஆதரவு தந்து, வெற்றி விரைவில் கிடைக்கவேண்டும் என்று விரும்பிப் பணியாற்ற முன் வந்தனர்.

திராவிடர் கழகம், இன்னமும் ஒருபடி முன் சென்றே, கூற விரும்புகிறது, சமஸ்தானங்கள், ஏதோ இந்திய யூனியனோடு சேர்ந்துவிடுவதை மட்டுமே, பெரிய காரியமாக, அவைகளின் பக்தியின் தன்மைக்குச் சான்றாகக் கருதி, அவைகளை 'இந்திய யூனியனில்' சேர்த்துக் கொள்வதை, ராஜதந்திரவெற்றி என்று கருதுவதுடன், காங்கிரஸ் தலைவர்கள் களிப்படைகிற தன்மை சரியல்ல—போதுமானதல்ல. இந்த சமஸ்தானங்கள் வலிய வலிய, மனுப் போடவேண்டும், எங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று—அப்போது, அவைகளின் யோக்யதை, ஆட்சி முறையின் இலட்சணம், அவைகளின் தகுதி திறமை, நாணயம் இவைகளைப் பரிசிலனை செய்து, நிபந்தனைகள் விதித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும், என்ற முறையைக் கையாண்டிருந்தால், இப்போது, சமஸ்தானங்களுக்குத் தரப்பட்டுள்ள இவ்வளவு அதிகாரங்கள் கூட, தரவேண்டிய அவசிய மேற்பட்டிருக்காது இந்தச் சமஸ்தானங்களின் மன்னர்களின் நிலைமையைக் கூட, அந்தஸ்த்தைக் கூட, பொதுமக்கள், அனுமதித்திருக்க மாட்டார்கள்—அவ்வளவு அதிகமான அளவு, சமஸ்தானாதிபதிகளின் குணாதிசயத்தை மக்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். வருஷத்தில் பத்துமாதம் பாரிசில் தங்கி, நாட்டுமக்கள் நெற்றிவியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டுச் சேர்த்த பணத்தை, நாட்டியத்துக்கும், குடிக்கும், குதிரைக்கும், நாய்க்கும் பாழாக்கும், லீலா விநோதர்களை, ஏன், ஏதோ அவர்கள், "இந்திய யூனியனில்" சேருகிறார்கள், என்பதற்காக, கொலுவிற்றிருக்கச்செய்ய வேண்டும்! மக்களுக்கு இவர்களால் என்ன இலாபம்? கருத்து வேகம் அதிகரிக்கும் இந்நாட்களிலே, முடிதாங்கிகளை, குடிஅரசுக் கோட்பாட்டினர் ஏற்கவும் கூசுகிறார்கள். பழைமையின்சின்னங்கள்-பாமரரின் பயங்கொள்ளிப் போக்கின் விளைவுகள்—குடிஅரசுக் கோட்பாடு எனும் அறிவுக் கதிர் தோன்றாமுன்னம் மக்கள் மனதைக் கப்பிக்கொண்டு மமதையைத் துணைக்கமர்த்தி மந்தகாச வாழ்வு நடாத்தும் மூடுபனிகள்—இந்த மன்னாதி மன்னர்கள்.

இந்தியாவை, தமது களிநடனக் காடாக்கிக் கொண்டு, அரண்மனைகளைத் தமது சிற்றின்பக் கூடமாகக் கொண்டு, அடுத்துக் கெடுப்போர் யார், அறநெறி அறிந்தோர் யார், விவேகி யார், வீணன் யார், என்ற விளக்கம் அறியும் பண்பும் அற்று, துடியிடைக்கும் கொவ்வை அதரத்துக்கும் தேன் மொழிக்கும் தேகக் காந்திக்கும் அடிமைப்பட்டு, மக்களின் மனம் ஓர் எரிமலை, அதை 'ராஜபக்தி' எனும் சல்லாத் துணி கொண்டு மறைத்துவிட முடியாது என்ற சாதாரண உண்மையையும் மறந்து, வயல்கள் வெடித்துக் கிடந்தாலும், ஆறுகள் வரண்டு போயினும், மாடுகன்று செத்து மக்கள் எலும்புந் தோலுமாகிப் போயினும், தமக்கு மகிழ்ச்சி தர மங்கையும் மதுவும், தமது கொலு மண்டபத்திலே, கோணங்கிகளும் கொடி பிடிப்போரும் இருக்கவேண்டும், ஊருக்கோர் உல்லாசக் கூடம், வேளைக்கோர் உடை, வேட்டைக்காடு, இருந்தாக வேண்டும், வீரமில்லாவிட்டாலும் விருதுகள் வேண்டும், போரிடும் திறனோ தீரமோ இல்லாது போயினும், பெயரளவில் ஒருபடை வேண்டும், என்று கருதி, பெரும் பொருளைப் பாழாக்கி, ஏழையை வாழவிடாது கெடுக்கும், இந்த ராஜாக்கள், இந்திய துணைக் கண்டத்திலே, ஏராளம். எங்கெங்கோ ராஜாக்கள்! எதெதனாலோ ராஜாக்கள்! இருபது சதுரமைல் உள்ள இடத்திற்கும் ஒருராஜா—இருப்பு ரூபா இரண்டே கால் என்று பொக்கிஷக் கணக்குள்ள இடத்துக்கும் ஒரு ராஜா.

கவிபாடியிருப்பார், இந்த மன்னன், பால்வடியும் முகத்தினன், கொடையில் கர்ணன், வீரத்தில் வீமன், என்றெல்லாம்—உண்மை உருவமோ காணச் சகியாததாக இருக்கும், குணமோ கேட்கச் சகியாததாக இருக்கும்—குலம் கோத்திரம் எடுத்துக் கொண்டாலோ, இவர் சூரிய குலம், இவர் சந்திர குலம், இவர் கஜினி வம்சம், இவர் லோடி வம்சம், இவர் மோகல் பரம்பரை, என்று படாடோபமாக இருக்கும்—பழங்கதை கிடக்கட்டுமய்யா இந்தப்பேர்வழியின் சொந்தத் தகுதி என்ன, திறமை என்ன, இவர் எதிலே வல்லவர், எதிலே கற்றவர், என்ன உபகாரம் செய்திருக்கிறார், யாருக்கு நல்லவர், என்று கேட்டால் ஒரு பதிலும் கிடைக்காது—தெரிந்த தகவலைத் தருவதானால், கேட்பவர் திடுக்கிட்டுப் போவார், சொன்னவர் மீது ராஜாத்துரோகக்குற்றம் வந்து சேரும்—தூக்குக் கயிறை முத்தமிட வேண்டி நேரிடும். இப்படிப்பட்டவீணர்களின் கூட்டம், வெள்ளையர் மூலம், பாதுகாப்புப் பெற்று வந்தனர்—நாடு அடிமைப்படாமலிருந்து நாட்டு மக்களின் அரசியல் அறிவுக்குத் தடை ஏற்படாமலிருந்திருந்தால், இந்தக் கோலாகலவாழ்வினர் கூண்டோடு இன்னேரம் அழிந்து போயிருப்பர். வெள்ளையர்கள் தமது ஏகாதிபத்யத்துக்கு ஏவலர்களாய், இவர்களை அமர்த்திக் கொண்டனர். இந்தஅலங்காரப்பதுமைகளுக்காகப் பலகோடி மக்கள் அல்லும் பகலும் உழைத்து அலுத்தனர். பாடுபட்டுத் தேடும் பணம், பார் ஆளும் பார்த்திபன் என்றபட்டம் பெற்றவனுக்குப் பானமாகவும் பண்டமாகவும், பாழாகிவிடுகிறதே, பாதி வயிறும் நிரம்பாது, நாம் பதைக்கிறோமே, என்று பாமரரில் ஒரு பகுதியினர் துணிந்து கேட்டாலோ, பட்டம்

(9-ம்பக்க பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 19—9—48 [ஞாயிறு


## வெல்க ஜனநாயகம்

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படவேண்டுமென்று திருச்சியில், 16—9—48-ல் கூடிய திராவிடர்கழக மத்தியக் கமிட்டியினர் முடிவு செய்திருந்தனர். போராட்டம், துவக்கப்பட்ட நாளிலிருந்து மிக வெற்றிகரமாக நடைபெற்றுவந்தது. அதுவும் குறிப்பாகச் சென்ற 22—8—48-ல் தலைவர்களைக் கைதுசெய்ததற்குப் பிறகு தமிழ்நாடெங்கும் உணர்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுத்தோடியதை அனைவரும் கண்டோம். இந்தி எதிர்ப்பியக்கத்தினரைக் கைதுசெய்யாமல் விட்டுவிட்டால், இயக்கம் “புஸ்” என்று போய்விடும் என்று சொன்ன சர்க்கார், இயக்கவளர்ச்சியைக் கட்டுப்படுத்த அடக்கு முறையைக் கையாண்டு தீரவேண்டிய நிலைக்கு வந்தனர். இன்றைய நிலைமையில் இயக்கத்தின் பேரால், நூற்றுக் கணக்கானவர்கள் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருந்துகொண்டிருக்கிறார்கள். 15—9—48-ந் தேதி எல்லா ஊர்களிலும் அடையாள மறியல் மிக மிக வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. இயக்கம், தொடர்ந்து நடைபெற்றால், விரைவில் வெற்றிகாணுவதற்கான எல்லா அறிகுறிகளும் இருந்தன. இந்த நிலைமையில் திடீரென இயக்கத்தை நிறுத்தியதானது பலருக்கு, ஏமாற்றமாகவும், வருத்தமாகவும்தோன்றியிருக்கலாம். ஆனால், இயக்கத்தை நிறுத்திஇருந்ததற்கானகாரணங்களை நம் கழகத்தோழர்கள் சற்று விரிந்த மனப் பான்மையுடன் பார்க்க வேண்டும்.

சென்ற சில காலமாகவே ஐதராபாத் பிரச்னை வலுத்துவந்ததை நாம் அறிந்திருந்தோம். ஐதராபாத் மக்கள், ஒரு காட்டுமிராண்டி ஆட்சியிலேயே காலந்தள்ளவேண்டிய அவசியத்திற்குள்ளாகிவிட்டனர். ரஸாக்கர்களின் அட்டூழியம் சகிக்க முடியாத எல்லைக்கு வளர்ந்துவிட்டது. ரஸாக்கர் படையைக் கலைத்துவிடுமாறு இந்திய சர்க்கார் கூறிய புத்திமதிகளை நிஜாம் சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். ஆகவே ஐதராபாத்திலுள்ள மக்களை, குண்டர்களின் ஆட்சியிலிருந்து காப்பாற்ற வேண்டிய பெரும்பொறுப்பை இந்திய யூனியன் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாயினர். யூனியன் படைகள், நேரடியாக யுத்தத்திலிறங்கி, வெற்றிகரமாக நிஜாமைப் பின்வாங்கும்படி செய்துவிட்டனர்.

ஐதராபாத் போரில், நம்முடைய மாகாணத்தின் பொறுப்பு, ஐதராபாத் சமஸ்தானத்தைச் சுற்றியுள்ள மற்ற மாகாணங்களுக் கிருப்பதைக் காட்டிலும் சற்று அதிகமானது என்பது வெளிப்படை. நம் மாகாண சர்க்கார் சென்ற சிலகாலமாகவே இந்த யுத்தத்தை எதிர்நோக்கி அதற்கு முன்னேற்பாடாகப் பலகாரியங்கள் செய்து வந்திருந்ததும் நாமறிந்ததே. நமது இயக்கம் நேரடி நடவடிக்கையிலிறங்குவதற்கு முன், பிரதமர் ஓமந்தூராரும், தலைவர் பெரியாரும் சந்தித்துப் பேசிய பொழுதுகூட, இயக்க வளர்ச்சியின் நிலை எப்படி இருந்தாலும், ஐதராபாத் போரில் சர்க்கார் இறங்கிவிட்டால், இந்தி எதிர்ப்புச்சம்பந்தமான, எல்லா நடவடிக்கைகளையும் நிறுத்தி வைப்பதாக, பெரியார் அவர்கள் வாக்களித்திருந்தார்கள்—ஐதராபாத் பிரச்சினையில் நம் சர்க்காரோடு ஒன்றுபட்ட கருத்துக்கொண்டவர்கள் நாம். இந்தப் பிரச்னையில், சர்க்கார் ஈடுபட்டிருக்கும்போது, சர்க்காருடைய முழுக்கவனமும் போரை வெற்றிகரமாக நடத்துவதில் முனைந்திருக்கிறபோது, நாம் ஒரு பக்கம் இயக்கத்தையும் நடத்திக்கொண்டு, இருக்கக் கூடாது. ஆகவேதான், ஐதராபாத் போரில் சர்க்கார் வெற்றி பெற நம்மாலான எல்லா உதவிகளையும் செய்வதென எண்ணி இந்தி எதிர்ப்பு நேரடி நடவடிக்கைகள் அனைத்தையும் தற்காலிகமாக நிறுத்திவைப்பதென்னும், மேலான முடிவை நம் மத்திய கமிட்டியினர் செய்தனர். நமது கழகம் செய்த இந்த முடிவானது நாம் அரசியலின் பெயரால், ஆட்சியாளர்களுக்கு, வீண் தொல்லைகளைத் தருகிறவர்களல்ல என்பதையும், நெருக்கடியான நேரத்தில் நாட்டுப் பற்றுக்கும் பாதுகாப்புக்குமான காரியங்களைச் செய்ய, நாம் பொறுப்புணர்ச்சியுடனும்கவலையுடனும் முன்வருகிறவர்கள் என்பதையும் விளக்கும் சிறந்ததோர் முடிவாகும்.

எதேச்சாதிகாரம் எந்த ரூபத்தில் எங்கு தலைதூக்கினாலும், மக்களாட்சியின் மாண்பை உணர்ந்த நாம், அதைத் தடுக்க நமது சக்தியை பயன்படுத்தியே தீருவோம். நமக்கும் ஆட்சியாளர்களுக்கும், இந்திமொழி சம்பந்தமாகவும், வேறு பல பிரச்னைகள் காரணமாகவும், கருத்து வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது. நம்முடைய கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும், ஊறுதேடும் வகையில் ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதைக் கண்டும் நாம் வாளாயிருக்க முடியாது. ஆகவேதான் நமது மக்களின் எதிர்கால வாழ்வைக்கெடுக்கக் கூடிய இந்தி நுழைப்புத் திட்டத்தை ஒழிக்க நேரடி நடவடிக்கையிலீடுபட்டோம். இது ஜனநாயக ஆட்சி முறையில் யாருக்குமுள்ள மறுக்க முடியாத உரிமையாகும். அந்த உரிமையைக் கூட இதுசமயம் நாம் விட்டுக் கொடுத்ததற்குக் காரணம், நாட்டில் அமைதி, பாதுகாப்பு, மக்கள் வாழ்வு, ஆகியவைகளைப் பாதிக்கக் கூடிய பெரியதோர் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் கால நிலையை உத்தேசித்துத்தான். பொறுப்புணர்ச்சியுடன் நமது கழகம் செய்த இந்த முடிவை ஜனநாயக கோட்பாட்டில் அக்கரை கொண்ட யாரும் வரவேற்பார்கள்; ஆதரிப்பார்கள், என்பதில் ஐயமில்லை.

ஒருபுறத்தில் பாஸிஸமும் அராஜகமும் உள்ளே நுழையுமோ என்ற கவலை தரும் நிலை இருக்கும்போது இந்தி நுழைவை எதிர்ப்பதை மட்டுமே கவனித்துக்கொண்டிருக்க முடியாது. இதைநமது தலைவர் அறப்போரின் துவக்கத்தின் போதே தெளிவுபடுத்தியிருக்கிறார். கழக அன்பர்கள் இதைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த நெருக்கடியான நேரத்தில் கழகம், நேரடி நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தது என்பது மட்டுமல்ல, மற்றோர் தீர்மானத்தின் மூலம் ஐதராபாத் சம்பந்தமாக இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள முயற்சியை, ஆதரித்துமிருக்கிறது.

“ஐதராபாத்தில் ஏற்பட்டேள்ள சீர்குலைவைத் தடுத்து, அங்கு நல்லாட்சி எற்படுத்த இந்திய சர்க்கார் எடுத்துக் கோண்டேள்ள நடவடிக்

கையை இக்கமிட்டி வரவேற்கிறது."

என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சமஸ்தானத்தில் சீர்குலைவு ஏற்பட்டிருப்பது மறுக்க முடியாத உண்மை. அத்தகைய சீர்குலைவை யாரும் அநுமதித்துக்கொண்டிருக்க முடியாது—கூடாது. எனவே சீர்குலைவைத் தடுக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியை, மக்களுக்கு அமைதியும், ஆனந்தமுமான வாழ்வு கிடைக்கவேண்டும் என்ற கொள்கையில் தளராத நம்பிக்கைகொண்ட நாம் ஆதரித்தாக வேண்டும். அதுபோலவே சமஸ்தானத்தில் இப்போது நல்லாட்சியில்லை. ஒரு சிறு சமூகத்தார் சகல அதிகாரங்களையும் கைப்பற்றி, பெரும்பான்மையான மக்களை ஆட்டிப்படைக்கும் அரசுமுறை, ஆகமத்தின் பேரால் அமைக்கப்பட்டாலும், அல்லாவின் பேர்கூறி நடத்தப்பட்டாலும், ரிஷிகள் முன்னின்று நடத்தினாலும், ரஜ்விகள் முன்னின்று நடத்தினாலும் குடியரசுக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள் அத்தகைய ஆட்சியை நல்லாட்சி என்று கூறமுடியாது. ஐதராபாத் சமஸ்தானம் மொகலாயர் காலத்தில் இருந்துவந்த தர்பார் முறையில் நடப்பது ஜனநாயககாலத்தையே கேலிசெய்வதாகும். ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்க மறுக்கும் ஒரு நிஜாமும், அவரைச் சூழ்ந்துகொண்டுள்ள பிரபுக் கூட்டமும், எந்த நியாயத்துக்கும் ஒத்துவராத முறையில் நடந்துகொள்ளும் ரஸாக்கர்களும் ஒரு நாட்டின் மதிப்பை கெடுக்கக்கூடியன என்பது மட்டுமல்ல, அந்த நாட்டு மக்களின் வாழ்வை நாசமாக்கக்கூடியவை. எதேச்சாதிகாரத்தையும், மக்களாட்சியை மறுக்கும் மன்னர்களின் கோலாகலத்தையும், வகுப்பின் பேரால் நடத்தப்படும் அநீதியையும், பிரபுக்களின் ஆதிக்கத்தையும், ஒழிக்கும் பெரும்பணியில் காங்கிரஸ், திராவிடர்கழகம், சோஸியலிஸ்டு என்ற கட்சி வேற்றுமைகள் குறுக்கிடக் கூடாது. பழைய முறை ஆட்சிக்கும், புதியஜனநாயக சக்திக்கும் இடையே மூளும் போரில் திராவிடர்கழகம் ஜனநாயக முகாமிலும் முன்னணியிலும்தான் நிற்கும். நல்லாட்சி என்று நாம் குறிப்பிடுவது மக்களின் ஆட்சியையேயாகும். அத்தகைய ஆட்சியை அமைக்கும் நோக்கத்துடன் இந்திய சர்க்கார் ஈடுபட்டதால் நாம் அந்த முயற்சிக்கு முழுஆதரவையும் தருவதெனத் தீர்மானித்தோம். அதன்படி இந்தி எதிர்ப்புநடவடிக்கையையும் நிறுத்தி வைத்தோம். எதிர்பார்த்தபடி ஐதராபாத், போர் நடவடிக்கைகளை நிறுத்தி இந்திய யூனியனிடம் சரண் அடைந்துவிட்டது. ஐதராபாத் நிலைமை இன்னும் சில தினங்களில் நேராகிவிடும். ஐதராபாத் நிலைமை ஒழுங்கான ஜனநாயகமுறையில் நல்லமுடிவு காணப்பட்டபின்னரும், சென்னை சர்க்கார் இந்தி எதிர்ப்பைப் பொறுத்தவரையில் பழைய பல்லவியையேபாடிக்கொண்டிருக்குமானால், திராவிடர் கழகச் செயல் குழுவினருக்கும், அவர்கள் விட்ட இடத்தில் இருந்தே அறப்போரை நடத்தும் நிலைமையே ஏற்படும்.

எனவே, தோழர்கள், திராவிடர் கழகச் செயல்குழுவினரின் அடுத்த தீர்மானத்தை எதிர்பார்த்து, மீண்டும் இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு வெற்றிகாணத் தயாராக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். வாழ்க ஜனநாயகம். வெல்க ஜனநாயகம்.

## நல்லாட்சியூர் நோக்கி

7-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டவனின் படை பாயும்—அந்தப் படைக்கு, எதிரிப் படையுடன் போரிடத்தெரியாது, ஏழையை அழிக்க நன்றாகத்தெரியும்.

இப்படிப்பட்ட ஆட்சிமுறையை, ஏன் பிரிட்டிஷார் விட்டுவைத்தனர்? ஒருவேளை, நாகரீக ஆட்சிக்கும் பழங்கால ஆட்சிக்கும், குடி ஆட்சிக்கும், முடி ஆட்சிக்கும், வித்யாசம் என்ன என்பதை மக்கள் தெரிந்துகொள்ளட்டும் இதன்மூலம், என்று எண்ணினார்களோ என்னவோ! எப்படியோ ஒன்று, வெள்ளையராட்சியை எதிர்த்து ஒழிக்கமுடியாத இந்த மன்னர்கள் கூட்டத்தை, மகாராஜாக்கள், ராஜாக்கள், நிஜாம்கள், நவாபுகள், என்ற பல்வேறு விருதுகளைச் சுமந்துகொண்டு, மக்களை அழுத்தும் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்க, பிரிட்டிஷார் அனுமதித்து விட்டனர்.

பிரிட்டிஷாரின் பித்தலாட்டத்தைக் கவசமாகக் கொண்டிதால் மட்டுமே இதுநாள்வரையில் தாங்கள் பீடத்தில் அமர்ந்திருக்க முடிந்தது என்பதையும் உணரமுடியாத அளவுக்குப் பித்தம் ஏறிவிட்ட இந்தப் பிரபுக்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சி போய்த் தொலைந்தபிறகும்கூட, தங்கள் வாழ்வு அப்படியே இருக்கும், முன்போலவே ஜொலிக்கும், என்று எண்ணினர்—மக்களாட்சியையும் ஏய்த்துவிட முடியும் என்று மனப்பால் குடித்தனர்.

பழங்காலக் கோட்டைகள், வேலும் வில்லும் மட்டும் ஆயுதங்களாக இருந்த காலத்திலே, மக்களை மருட்டவும், எதிர்ப்பைத் தகர்க்கவும் போதுமானவைகளாக இருந்தன. இப்போதுள்ள காலம் வேறு! கோட்டை கொத்தளங்கள், பீரங்கி வேட்டினால் தூள்தூளாகி விடக்கூடிய காலம். கண்ணுக்குத் தெரியாத உயரத்தில் விண்ணில் பறந்து, குண்டுகளை வீசினால், நாடுநகரம் நாசமாகிவிடக்கூடிய காலம். இந்தக் கால மாறுதலை உணராமல், நால்வகைச்சேனையை நம்பி வாழ்ந்தமுன்னோர்கள் கட்டிவைத்து, காலத்தால் கலனாகிப்போன கோட்டைகளையும், தூர்ந்து போன அகழிகளையும் நம்பிக்கொண்டு, நாமும்மன்னர்தானே, நம்மிடமும் படைஉண்டு, கோட்டை உண்டு கொத்தளம்உண்டு, அகழி உண்டு, ஆஸ்தான வித்வான்கட்டிக்கொடுத்த வீரப்பாடல்கள் உண்டு, என்று ஏமாளித்தனமாக எண்ணிக்கொண்ட ராஜாதி ராஜர்கள், பிரிட்டிஷார் போனபிறகு, தமக்குப் புதுயோகம் பிறந்துவிடும், என்றுகூடக்கருதினர், வக்கிரபுத்தி படைத்த சிலவடநாட்டு மன்னர்கள் பிரிட்டிஷார் போய்விட்டபிறகு, பட்டாபிஷேகம் செய்துகொள்ள, பாமர மக்களின் தலைவர்கள் லாயக்குடையவர்கள் அல்ல, பரம்பரை பரம்பரையாக, 'ராஜரீகம்' செய்துவரும், எங்களுக்கேதான், பட்டம் சூட்டிக்கொண்டு இந்தப் பெரிய ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் உரிமை உண்டு என்றுகூடப்பிதற்றினர். ஜோசியர்களும் ஆருடக்காரர்களும், தூபமிட்டு அதைக்கேட்டுக்கொண்டு, 'ஆச்சு, ஆச்சு, அதிகாரம் நமக்கு வரப்போகிறது' என்று நம்பிக்கொண்டு சிலமன்னர்கள் இருந்தனர் என்பதை விளக்கி, மந்தமதியின் விளைவாக அவர்களுக்கு ஏற்பட்ட மண்டைக் கர்வத்தை மட்டந்தட்டும் முறையிலே சர்தார்படேல் ஒருசிலருக்கு முன்பு பேசியிருக்கிறார். மன்னர்

ஆட்சியைத் திறம்பட நடத்தமுடியும் என்பதுமட்டுமல்ல, மக்களின் எதிர்ப்புச் சக்தியின் முன்பு மன்னர்கள் கூட்டம் எதும் செய்யமுடியாது, என்ற உண்மையையும், விடுதலை பெற்ற இந்தியா, வீரப்பிரதாபம் பேசும் வீணர்களின் விபரீதப் போக்குக்கு இடமளிக்காது என்பதையும், பொது மக்களின் கோபத்தீ அரண்மனையை நோக்கிப் பாயுமானால், தடுக்கும் வேறோர் சக்தியும் கிடையாது என்பதையும், உணரமறுத்த, மன்னர்கள் முதலிலே, பிடிவாதமாகவே பேசினர். தங்கள் ஆட்சி, நடைபெற்றே தீருமென்றும், இந்தியாவில் மற்றப்பகுதியிலே ஏற்படும் மக்களாட்சிக்கு மன்னர்களின் மண்டலங்களை அடக்கும் உரிமையும் இல்லை, ஆற்றலும் கிடையாது என்றும் பேசினர்; இன்னும் சில மன்னர்கள், மக்களாட்சியினர், எதிர்ப்புக்கிளப்பினால், வெளிநாட்டு உதவியைப்பெற்று, மக்களாட்சியை ஒழித்துவிடமுடியும் என்றும் கருதினர்.

வெள்ளையரும் பிரன்சுக்காரரும், வியாபாரம் செய்ய இங்குவந்தபோது, இந்த விளையாட்டு, நடத்த முடிந்தது. ஒரு அரசன் பக்கம்வெள்ளையன் துணை நிற்பான், வேறு அரசன் பக்கம் பிரஞ்சுக்காரன் துணையாகநிற்பான். கூலிப்படைகளை நம்பிப் பலகொற்றவர்கள் வாழ்ந்தனர். ஆனால் பிரிட்டிஷ் — பிரஞ்சு ராஜதந்திரிகளே, ஏகாதிபத்யச்சொக்கட்டான் விளையாட்டிலே, இந்த "ராஜாக்களைப்" பாச்சிகைகளாகக்கொண்டு, இலாபச் சூதாட்டம் நடத்தி, வெற்றி பெற்றனர். அவர்களின் உள்நோக்கத்தை உணராத இந்த ராஜாக்கள், நாட்டை அடிமைக்குழியில் தள்ளினார்கள். இது போன்ற விபரீதநாடகம் இந்த நாட்களில், பொதுமக்களின் விழிப்பும் அரசியல் அறிவும் மேலோங்கியுள்ள இந்த நாட்களில் நடைபெறமுடியாது என்பதை உணரச் சிலகாலம் பிடித்தது இந்தச்சிங்கார புருஷர்களுக்கு. உணர ஆரம்பித்தவுடனே உள்ளதும் போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம் ஏற்பட்டது. பயம் ஏற்பட்டதும், சர்தார் படேலின் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர்.

பாசமே, இந்தப் பயத்துக்குக் காரணம். சர்தார் படேலும் அவரைச் சார்ந்த பலரும், மன்னர்களின் இந்தப்போக்குக்குக்காரணம், அவர்களின் 'தேசபக்தி' என்று கூறுகிறார்கள். நாம் அதை நம்ப மறுக்கிறோம்—தக்க காரணத்துடன்.

மக்களின் கோபத்தின் முன்பு நிற்க முடியாது என்பதைக் கண்டுகொண்ட உடனே, மன்னர்களுக்கு, பாசத்தின் காரணமாக ஓர்வகைப் பயம் ஏற்பட்டது. எவ்வளவு கோலாகலம்! அழகான அரண்மனை! அப்சரசு போன்ற அந்தப்புரப் பெண்கள்! அவர்கள் உலவ நந்தவனங்கள்! நீராடச் சிங்காரச் சிற்றோடைகள்! அவைகளுக்குப் பக்கத்திலே சிருங்கார சாஸ்திர விளக்கம் கூறும் சிலைகள்! தர்பார்! கோலாகல வாழ்வு! இவ்வளவும் அடியோடு போய்விடுமே! இன்பவாழ்வுக்கு இறுதி நாள் வந்து சேருமே! பொன் காய்த்த மரங்கள்போல மக்களைக் கொண்டுள்ள மண்டலத்திலிருந்து நாம் விரட்டப்பட்டு, முடி இழந்து, சுகமிழந்து போகவேண்டி நேரிடுமே, நமது இரத்தின ஆபரணக்குவியல் என்ன ஆவது! தங்கப் பாளங்கள் என்ன ஆவது! பொன்னுடைகள் உள்ளன வண்டி வண்டியாக! பெண்ணரசிகள் உள்ளனர் கூட்டம் கூட்டமாக! எல்லாம் போய்விடுமே! ஆற்றுவார் இன்றித் தேற்றுவார் இன்றி, அடவியில் செல்லவேண்டுமே, நமக்கோ, பிழைக்கும் வழியும் தெரியாதே, பாடுபட்டுப் பழக்கம் கிடையாதே, பாடுபட்டுப் பிழைக்கும் உடல் வளமோ, உள்ளத் தூய்மையோ கிடையாதே, இனி என்ன செய்வது, என்று எண்ணி ஏங்கின மன்னர்கள், பாசத்தால் பதைபதைத்து, இவ்வளவும் போய்விடுமே என்ற பயத்தால் நடு நடுங்கினர்-அந்த நடுக்கத்தினூடே அவர்களுக்கு ஒரு தந்திரம் உதித்தது — எதை விட்டுக் கொடுத்தாவது, நாம் நமது இன்ப வாழ்வை, சுகவாசத்தைக் காப்பாற்றிக் கொண்டால் போதும்—புதிய திவானா? சரி, நியமிப்போம்! புது மந்திரிசபை அமைக்கவேண்டுமா? ஆஹா! யாரை நியமிக்கவேண்டும், கூறுங்கள், செய்கிறோம். சட்டசபைக்குப் பூரண அதிகாரம் தரப்பட வேண்டுமா? தந்துவிடுகிறோம்! எல்லாம் செய்கிறோம்—உரிமைகளை விட்டுக் கொடுக்கிறோம்—எமது சுக வாழ்வை, அரண்மனை வாசத்தை, பழைய இன்பத்தை மட்டும் எமக்கு அளித்துவிட்டால் போதும், என்று கேட்டுப் பெறுவது என்பதே அந்தத் தந்திரம். பற்பல மன்னர்கள் இந்தத் தந்திரத்தால், பட்டத்தை இழக்காமல், சுகவாழ்வை இழந்துவிடாமல், தப்பித்துக்கொண்டனர். தத்தமது மண்டலங்களிலே மக்களுக்கு அரசியல் அதிகாரம் கொடுத்துவிட்டு, அரண்மனை வாசத்துக்கு ஆபத்து வராமல் பாதுகாத்துக் கொண்டனர். முன்புபோலவே அவர்கள் முடிதரித்த மன்னர்களாகவே உள்ளனர்; அந்த முடிகளில் முன் போலவே நவரத்னங்கள் பிரகாசிக்கின்றன, வழக்கப்படியே பன்னீரில் குளித்து, பட்டாடை உடுத்திக்கொண்டு, பவனி வந்த வண்ணந்தான் உள்ளனர்—பட்டம் பறி போகவில்லை—படாடோபம் குறையவில்லை-விழாக்கள் நின்றுபோகவில்லை, வீண் செலவுக்கான வழிவகை அடைபட்டுப் போகவில்லை, ஆட்சிப் பொறுப்பற்ற ஆனந்தம்—பொதுமக்களின் நலன் எதுவெனக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியமும் அற்றநிலை, நிதிசேர்க்கவும், மதியுள்ள முறை வகுக்கவும், திறனுள்ள திட்டம் தீட்டவும் மந்திரிகள் இருக்கிறார்கள்—அத்தகைய மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க மக்கள் இருக்கிறார்கள்—சமஸ்தானத்துக்கு ஆபத்து நேரிடாதபடி பாதுகாக்க இந்திய சர்க்காரின் படைகள் உள்ளன—ஆகவே பயமும் இல்லை, பணிபுரியும் பாரமும் இல்லை, தொல்லை இல்லை, துயரம் இல்லை, சுகவாழ்வுக்கோ குறைவில்லை, ஆகவே இப்போது நமது வாழ்வு முள்ளில்லாத ரோஜாவாகி விட்டது. அரைத்தெடுத்த சந்தனத்தைப் பன்னீர் தெளித்துக் குழைத்துத் தருகிறார்கள் — நமக்கென்ன குறை என்று எண்ணி, களிப்புடன் காலந்தள்ள வழி கண்டுபிடித்துக் கொண்டார்கள். புயலிலே சிக்காமல் தப்பித்துக் கொண்டார்கள்! தப்பித்துக்கொண்டது மட்டுமா, பெரிய தேசபக்தர்கள், என்ற புகழையும் பெற்று விட்டார்கள்!!

சமஸ்தானாதிபதிகள் தேசபக்தியின் காரணமாக, படேல் திட்டத்தை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு உரிமைகள் வழங்கிவிட்டனர், என்று பலர் பாராட்டுகிறார்கள்.

சமஸ்தானாதிபதிகள், தங்கள் தந்திரத்தால், தங்கள் சுகவாழ்வைக் காப்பாற்றிக் கொண்டனர் என்பதுதான் உண்மை.

தேசபக்தியல்ல, அவர்களின் போக்குக்குக் காரணம்—சுய சுகமே

அவர்களின் குறிக்கோள். தங்கள் 'நிலை' காப்பாற்றப்பட்டால்போதும் என்பதே அவர்களின் உள்நோக்கம். அதிலே அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். மக்களாட்சி முழுவதும் பல இடங்களிலே ஏற்பட்டு, பல மன்னர்கள் முடிதுறந்து, திக்குத் தெரியாது ஓடி இருப்பர், இந்தத் தந்திரம் கையாளாவிட்டால்! மன்னர்களின் மனம் ஏதோ ஓர் மகத்தான மாறுதலுக்கு ஆளாகிவிட்டது போலவும், மக்களிடம் அவர்கள் ஏதோ மதிப்பு வைக்கத் தொடங்கிவிட்டது போலவும், இதனால் மக்களுக்குப் பெரிய இலாபம் கிடைத்துவிட்டது போலவும், பலர், தவறாகக் கணக்கிடுகிறார்கள். உண்மையில் நடைபெற்றதோ, மக்களின் எழுச்சி அரண்மனையைத் தாக்கித் தகர்த்திடாதபடி, மன்னர்கள் தங்கள் தந்திரத்தால் தடுத்துக்கொண்டனர்! மாந்தோப்புக்கு யார் சொந்தக்காரர் என்ற வழக்கு ஏற்பட்டு, கனி மரங்களைக் கவனிக்கும் உரிமையும் பொறுப்பும் கன்னியப்பனுக்கு; தின்ன நித்தமும் பத்துப் பழம் பெறுவது திம்மப்பனுக்கு, ஆனால், தோப்பு கன்னியப்பனுக்குத் தான் சொந்தம், அதைத் திம்மப்பன் தடை கூறாது ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று ஒரு தீர்ப்புக் கிடைத்தால், திம்மப்பனுக்குத் தானே இலாபம்! தீர்ப்பு அவனுக்கு ஏன் கசக்கப் போகிறது, தீங்கனி கிடைக்கும்போது! அதே நிலையிலேயே உள்ளனர் மன்னர்கள்—புதிய தேசபக்தர்கள்!!

மக்களின் எழுச்சி மன்னர்களின் மாளிகையை நோக்கிப்பாயும்போது, 'இந்திய சர்க்கார்' கண்ணை ஒரு சில நாட்களுக்கு மூடிக்கொண்டு, நடப்பது நடக்கட்டும் என்று கூறி விட்டிருந்தால், அல்லது மக்களுக்குச் சிறிது உதவியும் செய்வது என்று துணிந்திருந்தால், ஒரு மன்னரும் தப்பியிருக்க முடியாது, எங்கும் குடி அரசு தோன்றியிருக்கும். தந்திரத்தால், முடி அரசு முறையைக் காப்பாற்றிக் கொண்டுவிட்டனர், மன்னர்கள்.

தர்பார் செய்து பழக்கப்பட்டு, கனவுலகில் சஞ்சரிக்கும் நிஜாமுக்கு, இந்தத் தந்திர புத்தியும் இல்லை! எனவேதான், இப்போது நிஜாம் என்ற நிலைக்கே ஆபத்து நேரிடக்கூடும் என்ற அளவுக்குச் சம்பவங்கள் வேக வேகமாக உருவாகின.

இந்தியாவிலேயே மிகப் பெரிய சமஸ்தானம், இந்த ஐதராபாத்—மற்ற மன்னர்களுக்கு இல்லாத விருதுகள் நிஜாமுக்கு! இதனால் நிஜாமுக்கு மக்களின் கிளர்ச்சியை மதிக்கும் அறிவோ, மானிலத்தில் ஏற்பட்டிருக்கும் மகத்தான மாறுதல்களை உணரும் சக்தியோ, கால வேகத்தைக் காலிபாவும் தடுக்க முடியவில்லை என்ற உண்மையை உணரும் திறனோ, ஏற்படவில்லை,

பெரிய சமஸ்தானம் — ஆனால் துறைமுகமே கிடையாது!! இதை வைத்துக்கொண்டு, என்ன சாதித்துவிட முடியும்? துறைமுக வசதியுள்ள நாட்டவரின் தயவினாலேயே வாழவேண்டிய நிலையில் உள்ளவர், தாம் ஐதராபாத்துக்கு மட்டுமல்ல, தமது கருத்துக்கு எட்டிய இடமெங்கும நிஜாம் என்று கனவு கண்டு என்ன பலன்?

மற்ற எவ்வளவோ சமஸ்தானங்களிலே, மக்கள் உரிமைக் கிளர்ச்சியைத் துவக்கும்போது, மன்னர்கள் பயத்தாலும், ஓரளவு புத்தி சாதுர்யத்தாலும் கீழே இறங்கிவந்தனர்—நிஜாம் தர்பாரோ, மக்களின் உரிமைக் கிளர்ச்சிச் செய்திகளே, வெளியே தெரியவொட்டாதபடியான இருட்டடிப்பு வேலையையும், உரிமைக்காகப் போரிடுபவர்களை, உருக்குலைய வைக்கும் காட்டு மிராண்டி நடவடிக்கைகளையும் கையாண்டு கடைசிவரை ஒருகை பார்க்கலாம் என்று கருதிற்று.

ஒரு முஸ்லீம், மன்னராக இருப்பதாலும், அந்த மன்னரும் ஒரு இருநூறு வருஷகாலமாக வாழ்ந்து வரும் பரம்பரையைச் சார்ந்தவராக இருப்பதாலும், அங்கு, எது எப்படி நடந்தாலும் யாரும் கேள்வி கேட்க, நீதி கேட்க, வரமுடியாது என்று எண்ணி இறுமாந்திருந்த போக்கு, எத்தனை காலத்துக்குப் பலிக்கும்?

ஐதராபாத், முஸ்லீம் மன்னரின் ஆட்சியிலே இருக்கிறதே ஒழிய, அங்குள்ள மக்களில் மிக மிகப் பெரும்பான்மையினர், இந்துக்கள்! மிகப் பெரும்பான்மையான மக்கள் இந்துக்களே ஒழிய, அதிகாரம், அந்தஸ்து சிறுபான்மையினரான முஸ்லீம்களுக்கே தரப்பட்டு, அங்கு ஒரு முஸ்லீம் ஆட்சிதான் நடைபெற வேண்டுமென்பது மாற்ற முடியாத திட்டம் என்று கருதப்பட்டுவந்தது. இது எந்த வகையிலேயும் பொருத்தமானதோ, நியாயமானதோ, வெற்றி பெறக்கூடியதோ அல்ல.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, அங்கு மக்கள், பொறுப்பாட்சிக் கிளர்ச்சியைத் துவக்கி, தர்பார் போக்குக் கூடாது, ஜனநாயகம் தழைக்க வேண்டும், மக்களாட்சிக்கு வழிவகை வேண்டும் என்று கேட்டனர்—நிஜாம் சர்க்கார் அடக்கு முறையை அவிழ்த்துவிட்டதேயன்றி, அன்பாட்சியோ, அறநெறியுள்ள ஆட்சியோ அமைக்க முன்வரவில்லை.

எங்கும், மக்களாட்சி ஏற்பட்டு வரும் இந்தக்காலத்திலே, பழைய, 'தர்பார்' நீடிக்க யார் அனுமதிப்பார்கள்? ஏன் அனுமதிக்கவேண்டும்?

நாடகங்களிலே கூட 'ராஜாக்கதைகள்' குறைந்தே போய்விட்டகாலம் இது — இந்த நாட்களிலே, பழம் பெருமைபேசிக்கொண்டு, ஜனநாயகவாடையே வீசாதபடி தடுத்துக் கொண்டு ஒரு தர்பார், ஏன் இருக்க வேண்டும்?

மக்களாட்சியிலே, முக்கியமான தத்துவம், எங்கெந்த இடத்தில், எந்த வகையான இனம், அல்லது மக்கள் கூட்டம் பெரும்பான்மையாக இருக்கிறார்களோ, அந்த இடத்தில், அந்த மக்களிடமே அதிகாரம் இருக்கவேண்டும், ஆட்சி முறை எப்படி இருக்கவேண்டும் என்ற நிர்மானிக்கும் உரிமை அவர்களுக்கே உண்டு, அவர்களே அந்தநாட்டு நாயகர்கள், என்பதுதான். அதுதான் ஜனநாயகம்.

அந்த ஜனநாயக முறைப்படி பார்க்கும் போது, ஐதராபாத் சமஸ்தானத்திலே மிக மிகப் பெரும்பான்மையினராக, 100-க்கு 80 பேருக்குமேல் உள்ள மக்களிடம் தானே ஆட்சிப் பொறுப்பு இருக்க வேண்டும்—இந்த நீதியைக் கெடுக்கவும் மறுக்கவும் ஒரு ரஜ்வி கிளம்பினால், அவன் இனவெறி, மதவெறி இவைகளின் மூலம் உரிமைக் கிளர்ச்சியை அடக்கிவிட முடியும் என்று எண்ணினால், இந்த நிஜாம், செய்திருக்க வேண்டியது என்ன? காலத்தின் வேகத்தின்படி காரியம் நடப்பதானால், "தம்பி ரஜ்வி! நானே இனி நிஜாமாக இருக்கமுடியாது, இருக்கக்கூடாது. மன்னர்களே வேண்டாம் என்று மக்கள் கூறும் காலம் இது! அதிலும் நானோ முஸ்லீம், பிரஜைகளோ இந்துக்கள்—

இந்த நிலையில், நிஜாம் என்ற நிலையையாவது இழந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், குடிமக்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தாக வேண்டும்— அவ்விதம் மக்களிடம் ஆட்சியை ஒப்புவிப்பதானால், மக்களிலே, எந்த இனத்தார் பெரும்பான்மையினராக உள்ளனரோ அவர்களிடம்தான் ஆட்சி அதிகாரம் போய்ச் சேரும்—அதுதான் முறை—அப்படிப் போகும்போது இன்று நமது தர்பாரிலே உள்ளது போலச் சர்வம் முஸ்லீம் மயம் என்று இருக்கமுடியாது, இதை எப்படிச் சகிப்பது, முஸ்லீம்களுக்கு உள்ள அதிகாரம் பறிபோவதா என்று நீ கதறிப் பயனில்லை, இது என் ஆட்சிக்குட்பட்ட நாடு, ஆனால் மக்களுக்குச் சொந்தமான இடம், மக்களாட்சி முறைப்படிதான் காரியம் நடைபெற வேண்டும்—இதிலே நீ குறுக்கிடாதே — ஜனநாயகத்தை எதிர்க்க எவராலும் முடியாது"— என்று கூறி, அடக்கி இருக்கவேண்டும் நிஜாமோ ரஜ்வியின் பேச்சை, வீரமுழக்கமென்றும், ராஜ பக்திப் பாடலென்றும் எண்ணி, அந்தச் சத்தத்தைச் சிந்து எனக் கொண்டு களித்தார்! இந்தச் சமயத்தில் இந்தியப் படை வீரர்களின் பீரங்கிச் சத்தம், நிஜாமின் செவியில் விழுந்தது!!

"நிஜாமே! உமது பெருமை என்ன, பிரதாபமென்ன! வம்சாவழி எப்படிப்பட்டது தெரியுமா! அருமையான அசப்ஜா வம்சமாயிற்றே! அப்படிப்பட்ட வம்சத்துக்கு ஆபத்து வருவதை, அடியேனால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? தைரியமாகக் கூறிவிடுங்கள்—நமது ராஜ்யத்திலே யாரும் நுழையக் கூடாது என்று—எந்தக் கருத்தும் நுழையக் கூடாது என்று 'பர்மன்' பிறப்பித்து விடுங்கள். இந்திய சர்க்கார், உமக்குக் கட்டளையிடுவதா! யோசனை கூறுவதா! நிஜாம் ராஜ்யத்துக்கு யோசனை கூற, இவர்கள் யார்? ஜனநாயகம்—பெரும்பான்மை மக்கள்—வகுப்பு நீதி — என்பவைகளெல்லாம் அர்த்தமற்ற வார்த்தைகள்—தர்பாரைக் கெடுக்கும் சூழ்ச்சிகள்—இவைகளை நம்பவேண்டாம் —நானிருக்கப் பயமேன்! நமது ரஜாக்கர்களின் வீரதீர பராக்கிரமத்தைப் பாருங்கள்!" என்றெல்லாம் பேசி, ரஜ்வி, நிஜாமின் கருத்தைக் குருடாக்கிவிட்டான். ஏற்கெனவே, ஏகபோக ஆட்சியின் காரணமாக, காலத்தை அறியமுடியாது கருத்துக்குழம்பி இருந்த நிஜாமுக்கு ரஜ்வியின், 'தூபம்' மேலும், கருத்தைக் குருடாக்கவே பயன்பட்டது. இந்தியப் படைகள், அவுரங்காபாத்தைப் பிடித்துவிட்டன, எப்புறமும் வெற்றி கிட்டி வருகிறது, எதிர்ப்புகள் முறிகின்றன, எல்லோரா குகையைத் தாண்டிவிட்டனர், என்றெல்லாம், விநாடிக்கு விநாடி வந்த போர்க்களச் செய்திகளாவது, நிஜாமின் கருத்தைத் தெளியவைத்திருக்க வேண்டாமா?

பொறுப்பையும் கவலையையும் மறந்த நிலையில் உள்ள நிஜாமுக்குத் தெளிவும், நாட்டைக் காடாக்கிடும் நாசகாரியத்திலே நம்பிக்கை கொண்ட ரஜ்வி கூட்டத்துக்கு அழிவும் ஏற்பட்டு, சமஸ்தான மக்கள், அமைதியை அடிப்படையாகக் கொண்ட நிலையைப் பெறவேண்டும் —நோக்கமும் திட்டமும் இதுதான் என்பதைப் போர்நடாத்திய தளபதி தெளிவாக்கியுள்ளார். வெற்றியுடன் இந்தத் திட்டம் நிறைவேறும் என்பதன் அறிகுறியே நிஜாமின் சரண் புகு நிகழ்ச்சியாகும். இனி, எத்தகைய அரசியல் முறை தேவை, இந்திய யூனியனுடன் எந்த முறையில் இணைந்திருப்பது, என்பனபோன்றவைகளை மக்களே தீர்மானிக்கும் வாய்ப்பு கிடைக்கவேண்டும். இந்த வெற்றிக்கு தம்மாலான துணைபுரிய வேண்டுவது, ஒவ்வொரு ஜனநாயக வாதிக்கும் உள்ள கடமை என்பதை உணர வேண்டும். வெற்றி கிடைத்தது, வேதனையும் சோதனையும் ஒழிந்தது, ஹைதராபாத்தில் நல்லாட்சியும், மற்றப் பகுதிகளுடன் நல்லுறவும் ஏற்பட இனி ஆவனசெய்யவேண்டும், விரைவில். படைகள் சென்றது, சிகந்திராபாத் நோக்கி, என்று கூறப்பட்டது— ஊரின் பெயர் அது—ஆனால் உண்மையில், வெற்றிகரமாகப் படைகள் போய்ச் சேர்ந்த இடம் இலட்சிய பூமி,— வெற்றியூர், ஜனநாயகபுரி — குடிஅரசூர் — நல்லூர் — நல்லாட்சியூர் என்று கூறுவோம் — முடிதாங்கிகளின் பிடியிலிருந்து விடுபட்டு மக்கள் ஆட்சி ஏற்படச் செய்ய வேண்டும்—நமது படைவீரர்கள் சிந்திய இரத்தம் இந்த நற்காரியத்துக்கே பயன்படவேண்டும்.

*

## வருந்துகின்றோம்.

நண்பர் C.D.T. அரசு அவர்களின் தந்தையார் தோழர் தேவராஜன் அவர்கள் காஞ்சிபுரத்தில் 17-9-48 காலை உயிர் நீத்தார். காலஞ்சென்ற பெரியார் தீவிர சுயமரியாதைக்காரர். உள்ளூர்கிறித்தவ உயர்நிலைப்பள்ளியில், முதன்மை எழுத்தாளராகப் பலகாலம் வேலை பார்த்து வந்தார். அது காலை திராவிட மாணவர்களின் கல்வி வளர்ச்சியில், அவர் காட்டிய ஊக்கம் சிறப்புக்குரியதாகும். நாடகக் கலைக்கும், பணி பல புரிந்திருக்கிறார். எவரிடத்தும் அன்புடன் உரையாடும் இயல்புடையவர். அவருடைய முகத்தில் சோகமோ, கோபமோ என்றும் தோற்றமளித்ததில்லை. பொதுவாக நமது இயக்கத் தோழர்களுக்கு அவர் பெரிதும் ஆதரவு காட்டி வந்தார். கடந்த நான்கு ஆண்டுகளாகப் பாரிசவாய்வால் தாக்குண்டு படுக்கையிலேயே முடங்கிக்கிடக்க வேண்டியதாகப் போய்விட்டது.

உள்ளூர் திராவிடர் கழகத்தினர் தங்கள் மரியாதையைக், கழகக் கொடிகளைத் தாங்கி இடுகாடு வரை செல்வதின் மூலம் காட்டிக்கொண்டனர்.

தந்தையை இழந்திருக்கும் நண்பர் அரசுக்கும், அவர் குடும்பத்தாருக்கும் நமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## நோட்டீஸ்
## செங்கல்பட்டு டிஸ்டிரிகட்டு கோர்ட்டு
### O. P. No. 72 of 1948

சைதாப்பேட்டை தாலுக்கா சுரோத்திரியம் வீருபுரத்தில் இருக்கும் இன்டூர்

1. இராமகிருஷ்ணன்
2. காந்தம்மாள்
3. லோகம்மாள்

} மைனர்கள்.

திருவள்ளூர் தாலுக்கா கம்மவார் பாளயம் மதுரா வல்லாத்து கோட்டை கிராமத்தில் இருக்கும் K. கன்னய்ய நாயுடு குமாரன் K. செங்கம நாயுடு. மனுதார்.

மனுதார் தன்னையாவது கோர்ட்டு கார்டியனையாவது ஷை மைனர்களுக்கும் 1-ம் மைனரின் சொத்துக்களுக்கும் நியமிக்க ஷை மனு கொடுத்து அது 27—9—1948-க்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை உள்ளவர்கள் ஷை கோர்ட்டில் அன்று தெரிவித்துக்கொள்ளலாம்.

செங்கல்பட்டு }
12-9-1948 }

P. கிருஷ்ணசாமி,
மனுதார் வக்கீல்.

# பிரிட்டிஷ் பதுமை!

—✲—

*வீரத்தின் விளைவா? இல்லை. அன்பின் அமைப்பா? அதுவும் கிடையாது. மானங் காத்த பெருமையால் பிறந்ததா? வரலாறே வேறு விதம்.*

படையெடுத்து வந்தவர் அனைவர் முன்பும் அடி பணிந்து, அவருக்கு இச்சகம் பேசி, எடுபிடியாக ஏவல் புரிந்து, அதட்டினால் அடங்கி, அன்பு காட்டினால் ஆர்ப்பாட்டஞ் செய்து, தன்னிலையைக் காப்பாற்றிக் கொண்ட பெருமை, இந்த இந்திய உபகண்டத்தில், மணிமுடி தாங்கிய மன்னாதி மன்னர்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். ஹைதராபாத் நைஜாமும் இந்தப் பொதுவிதிக்கு விலக்கல்ல.

ஹைதராபாத் அரச பரம்பரை அமைப்பே ஓர் அலாதி. 1713-ல் தான் நைஜாமின் பரம்பரை தோன்றியது. மொகலாய அரசர் அவுரங்கஜீப்பு அரண்மனையில் அலுவல் பார்த்த அஸப்ஜாதான் இதன் மூலகர்த்தா. தாம் செய்த சேவைக்கீடாக, தக்காணத்தைக் காணிக்கையாகப் பெற்றார் அஸப்ஜா. மொகலாய சாம்ராஜ்யம், அவுரங்கஜீப்புக்குப் பின்னர், சரிந்துவரும் நிலையிலும், அஸப்ஜா டில்லிக்குத் தண்டனிடும் நிலையை விட்டுவிடவில்லை. இருந்தாலும் அது உண்மையானது என்றும் சொல்வதற்கில்லை. தண்டனிட்டாரே யன்றி, கப்பங் கட்டுவதை நிறுத்திவிட்டார். தமது தரணியின் வருவாய் அனைத்தும், மராட்டிய வீரர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கே சரியாகிவிடுகிறது எனும் காரணத்தையும் காட்டிவிட்டார்.

என்றும் சுதந்திர தரணியாக நைஜாம் இருந்ததில்லை. டில்லியின் ஆணைக்கு, அடிபணியும் அந்தஸ்தே அதற்கு இருந்தது. 1829-ல் முடிபுனைந்து கொண்ட நாசீருத்தௌலாவும், தமது பட்டமேற்பை அனுமதிக்குமாறு, டில்லிக்கு விண்ணப்பித்துக் கொண்டபொழுது, நூறு பொற்காசுகளும் ஒரு வைரமாலையும் கப்பமாக அனுப்பினார். மொகலாய சாம்ராஜ்யாதிபதிக்கு அடக்கமானதுதான் நைஜாம் என்பதை, 1858-வரை வெளியிடப்பட்ட நாணயங்கள் அனைத்திலும் குறிக்கப்பட்டுள்ளன. மொகலாய சாம்ராஜ்யம் சிதைந்தது. அந்த இடத்தைப் பிரிட்டிஷ் படைபலம் நிரப்பியது. பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குச் சாடி சொல்லி, ஆட்சி உரிமையைக்காப்பாற்றிக்கொள்ளும் சிறந்த பணியை மேற்கொண்டது நைஜாம்.

அண்டையிலுள்ள மராட்டியர்களோடு தொல்லைப்பட வேண்டியதாகவே இருந்தது நைஜாமுக்கு. மராட்டியர்களின் சொல்லுக்கு செல்வாக்கு வளர்ந்தது டெல்லியில, இதன் பலனாக, தக்காணத்தின் வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியை மராட்டியர்களுக்குக் கொடுத்துவர வேண்டுமென, டில்லி கட்டளை பிறப்பித்திருந்தது.

1749 அஸப்ஜா இறந்தார். அவருடைய இரு பிள்ளைகளிடையே சச்சரவு தோன்றியது, எவர் பட்டத்திற்கு வருவது என்று. ஒருவருக்கு அடித்தது யோகம். இந்த வேளையில், தென்னாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த பிரெஞ்சுக்காரர்களின் ஆதரவு ஒருவருக்குக் கிடைத்தது. பிரெஞ்சுத் தளபதி தூய்ப்ளேவின் படைபலத்தால், சலாபத்ஜா ஆட்சி பீடம் ஏறினார்; தூய்ப்ளே கொடுத்த பிச்சை அது.

ஆங்கிலேயரா? பிரெஞ்சுக்காரரா? எவர் ஆதிக்கம் தென்னாட்டில் நிலைப்பது எனும் பிரச்னை தீர்க்கப்படவேண்டியதாக இருந்தது. இருநாட்டினரிடையேயும் போர் மூண்டுவிட்டது. பிரெஞ்சுப் படை வீரர்கள், தளபதி புஸ்ஸியின் தலைமையில் வெற்றிமேல் வெற்றி பெற்றனர், ஆங்கிலேயருக்கு எதிராக. மராட்டிய எதிர்ப்பிலிருந்து தம்தலையைக்காப்பாற்றிக்கொள்ள நைஜாமுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. நைஜாமிடமிருந்து நான்கு ஜில்லாக்களை பரிசாகப் பெற்றுக்கொண்டு, பிரெஞ்சுத் தளபதி தமது படை பலத்துடன் நைஜாம் தலைநகரில் தங்கிவிட்டார். இந்த உறவு அதிககாலம் நீடிக்கவில்லை.

பின்னர் ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரரைக் களத்தில் தோற்கடித்தனர். பிரெஞ்சுக்காரருக்கு நைஜாம் அளித்த நான்கு ஜில்லாக்களையும், ஆங்கிலேயர்கள் தமதாக்கிக்கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள் தயவால் அரியாசனம் ஏறி இருந்த தனது சகோதரனை ஜாவைத் தொலைத்துவிட்டு பட்டமேற்ற நிஜாம் அலி, ஆங்கிலேயருக்கு எதிராகக் கர்நாடகத்தின்மீது படை எடுத்தார் — கிடைத்தது தோல்வி. இது சமயம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, ஆங்கிலேயரின் படை பாதுகாப்பாக அமைந்தது நைஜாமுக்கு.

மைசூரில் பலம் பெற்றிருந்த ஐதர்அலியின் ஆக்ரமிப்பிலிருந்தும், மராட்டியர்களின் படையெடுப்பு பயத்திலிருந்தும் நைஜாம் காப்பாற்றப்பட்டார்.

ஆங்கிலேயர் கண் காணிப்பால், நைஜாமின் ஏதேச்சாதிகார ஆட்சிக்கு இடமில்லாமல் இருந்தது. இந்த நிலையை நைஜாம் விரும்பவில்லை. பக்கத்திலிருந்த ஐதர் அலியோடு சேர்ந்துகொண்டு, ஆங்கிலேயர்படை பலத்தை, களத்தில் பரிசோதித்தார். கிட்டியது தோல்வி. மசூலிப்பட்டினம் ஒப்பந்தந்தான் முடிவு. இதன்படி, நைஜாமின் தலைநகரில் அதிகப்படியாக ஆங்கிலத் துருப்புகள் அமர்த்தப்பட்டன. இந்நிலையிலும் நைஜாம், தாம் ஏதேச்சாதிகார ஆட்சிக்கு வழி காண்பதிலேயே கவனம் செலுத்திவந்தார். மராட்டியத் தலைவர்களையும், ஐதர் அலியையும் ஒன்றுகூட்டி, ஆங்கிலேயர்மீது படையெடுக்கத் திட்டமிட்டார். இத்திட்டம் உருவாகுமுன்பே ஆங்கிலேயர்களால் மேலும் பலத்த கண் காணிப்புப் போடப்பட்டுவிட்டது.

சில ஆண்டுகள் கழித்து மராட்டியர்கள், தாங்கள் முன்னாள் பெற்று வந்த, தக்காணப்பிரதேசத்தின் வருமானத்தில் ஒருபகுதியை மீண்டும் நைஜாம், தங்களுக்குத் தரவேண்டுமெனக்கேட்டனர். மராட்டிய பீஷ்வாக்களிடம் செய்துகொண்டிருந்த ஒப்பந்தப்படி, இந்த விவகாரத்தில் தாங்கள் குறுக்கிடமுடியாதெனஆங்கில அதிகாரிகள் கூறிவிட்டனர். எனவே மராட்டியர்களுக்கும் நைஜாமுக்கும் போர் மூண்டது. குர்துலா என்னும் இடத்தில் நைஜாம் படை முறியடிக்கப்பட்டது. இந்தத்தோல்வியின் பலனாக, பேராரும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் பெரும் பகுதியும், நைஜாமால் மராட்டியர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டது,

போர்ச் செலவிற்காகப் பெருந்தொகையும், பல ஆண்டுகளாகக் கொடுக்கப்படாமல் இருந்த நைசாமின் வருமானத்தின் ஒருபகுதியும், நைசாம் மராட்டியர்களுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஆங்கிலேயர்களின்போக்குத் தமக்குச் சாதகமாக இல்லாததைத் தெரிந்துகொண்ட நைஜாமுக்கு, ஏற்கெனவே ஆங்கிலேயர்கள்மீது இருந்த ஆத்திரம் பெருகியது. ஆங்கிலர்க்கு எதிராகப் பிரெஞ்சுக்காரர்களின் ஒத்துழைப்பை வேண்டி நின்றார். பிரெஞ்சுத் துருப்புகளுக்கும் ஏராளமாகப் பொருளைக் கொடுத்துக்காப்பாற்றிவந்தார். இந்தச் சூதைத் தெரிந்த அன்றைய வைசிராய் வெல்லெஸ்லி—1798-ல் முடிவாக என்றென்றும் நைஜாமைத் தலையெடுக்க விடாமல் செய்துவிட்டார். ஹைதராபாத்தில் வைக்கப்பட்டிருந்த ஆங்கிலத் துருப்புகளின் எண்ணிக்கையும் பெருக்கப்பட்டது. ஓராண்டு கழித்து ஐதர்அலியின் மகனான திப்புசுல்தானின் வீர உணர்ச்சியும் மங்கியது. அவர் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பும் துண்டாடப்பட்டுவிட்டது ஆங்கிலர்களால். அதில் ஒரு பகுதியை, தங்கள் நல்லெண்ணத்தின் அறிகுறியாக ஆங்கிலேயர்கள் நைஜாமுக்குக் கொடுத்தனர்.

செழுமையாக இருந்த அந்தப் பிரதேசம், நைஜாமின் ஆட்சிக்கு உட்பட்டதும் சிறுகச் சிறுகச் சீரழிந்து போய்விட்டது.

கைமாறினவுடன் இன்னின்னார் இந்த இந்த அளவு வரி தர வேண்டுமெனக் கட்டளை இடப்பட்டுவிட்டனர். வரி வசூலிப்பதில் வேற்றுமை காட்டப்படவில்லை. செல்வர் வறியர் அனைவரும் கொடுமை செய்யப்பட்டனர். ஆண் பெண் என்ற வித்தியாசத்தைக்கூட வரி வசூலிக்கும் அதிகாரிகள் பொருள்படுத்துவதில்லை. மார்பிலே கல் ஏற்றுவது, பழுக்கக் காய்ச்சின குறட்டினால் விரல்களை நசுக்குவது போன்ற கொடுஞ் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. இங்கிலையில் வரி கொடுக்கத் தங்களால் இயலாமையை எடுத்துக்கூறி அலறுவது, மனித உள்ளம் படைத்த எவரையும் நடுக்குறச் செய்யும் என, இவைகளை நேரில் கண்ட ஆங்கிலேயர் ஒருவர் குறித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆயுத பலத்தால் பிடித்துக்கொண்ட மைசூர் அரசுக்குச் சொந்தமான பிரதேசங்களை, திரும்பவும் ஆங்கிலர்க்கே சொந்தமாக்கி விட்டார் நைசாம். இதற்குப் பிரதிபலனாக முன்னிலும் அதிகப்படியான ஆங்கிலேயர்களின் இராணுவ பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டார்.

1803-ல் நிஜாம்அலி இறந்தார். அவர் மகன் சேகுந்தர் ஜா அரியாசனத்திலமர்ந்தார். இந்த ஆண்டில் ஆங்கிலேயருக்கும் மராட்டியருக்கும் போர் மூண்டது. ஆங்லேயருடன் செய்துகொண்டிருந்த ஒப்பந்தப்படி நடந்துகொள்ளாமல், ஆங்கிலேயருக்கு எதிராக சதி செய்ய முற்பட்டார் ஜா. நைஜாமின் கோட்டைக்குள்ளாகவே ஆங்கிலத் துருப்புகள் வைக்கப்பட்டன. இவ்வளவு துரோகத்தின் பின்னரும் ஆங்கிலர்தயவால் முன்னர் குதுர்லா போரில் இழந்துவிட்ட பேரார், பிரதேசத்தில்பெரும் பகுதி நைசாமுக்குக் கிடைத்தது.

"பிரிட்டிஷ் தொடர்பினால் தான் நைஜாம், ஓர் தனிநாடாகநிலைத்திருக்கிறது. 1800-வது ஆண்டிலும் அஸப் குடும்பம் மக்கள் நல்லெண்ணத்தைப் பெறவில்லை. அதாவது அன்னியர்களானும் நிலையில மாற்றம் ஏற்படவில்லை. பிரிட்டிஷ் துணை இல்லையானால் சமஸ்தானத்திலுள்ள சில முஸ்லிம்கள் ஆதரவைத்தான் நைஜாம் ஆட்சிநம்பிவாழவேண்டும். மராட்டிய எழுச்சிக்கு முன் இது வீண் நம்பிக்கையாகும். சுயேச்சையாகச் செயலாற்றவிடப்பட்டால், நைஜாம் தமது ஆட்சியை எவ்வளவு காலம் காப்பாற்றிக்கொள்வார் என்பது ஐயப்பாட்டிற்குரியதாகும். மராட்டியர், கன்னடர், ஆந்திரர் ஆகியமூன்று மொழியினரும் ஐதராபாத்மீது கருத்துச்செலுத்தியுள்ளனர். ஏற்கெனவே இருந்ததுபோல் இந்நிலப்பரப்பு மொழி வழி அமைந்துவிடவேண்டுமென்பதுதான் இவர்கள் கிளர்ச்சியின் முக்கிய நோக்கம் இது நிறைவேறுமானால் ஹைதராபாத் மறைந்தொழியும்............ கட்டுப்பாடு இல்லாமல் சுயேச்சையாக, தாம் கனவு கண்டுகொண்டிருக்கிறபடி அனுமதித்தால், நைஜாம் தமதுகுடிகளின் நலனை ஒரு சிறிதும் கருதமாட்டார்."

இவ்வாறு நைஜாமின் உண்மை நிலையை அன்று வைசியராக இருந்த வெல்லெஸ்லிபிரபு இங்கிலாந்திலுள்ள மந்திரிக்கு எழுதியுள்ளார்.

ஆங்கிலர்களின் ஆசிர்வாதமும், அவர்கள் இராணுவத்தின் பாதுகாப்பும், கிடைத்திருக்காமல் இருந்தால், ஹைதராபாத் எனும் பெயரும், அப்பெயர் தாங்கியுள்ள நிலப்பரப்பை ஆட்சி செய்வதற்கு ஒரு திருக்கூட்டமும் இருந்திருக்கவே முடியாது. அந்நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களின் நல்வாழ்வில் நாட்டமுடையவர்களாக ஆங்கிலர்கள் இருந்திருந்தால், நைஜாமுக்கு ஆதரவும், அவர் தங்களுக்கு எதிராகச் சதி செய்த ஒவ்வொரு நேரத்திலும் மேலும்சில இடங்களைப் பரிசாக வழங்கியும் இருக்கத்தேவை இல்லை. ஆனால் வந்தவர்களுக்கு அந்த நோக்கமில்லையே! சொந்தவாழ்வை சொகுசாக்கிக்கொள்வதுதானே அவர்கள் முக்கியநோக்கம். நேரடியான ஆங்கில ஆட்சியின்கீழ் இருந்திருந்தாலாவது சிறு அளவிலாவது நைஜாம் மக்கள் நன்மை சில பெற்றிருப்பர். இந்த இருநூறு ஆண்டுகளில் எத்தனையோ முறை பற்பல காரணங்களுக்காக ஆங்கில அதிகாரிகள் ஆணையிட்டும், வேண்டிக்கொண்டும், நைஜாமுக்குச் சுயேச்சையாக ஆளும் உரிமை இல்லை என்பதைக் காட்டிக்கொண்டுள்ளனர். பிரிட்டிஷார் பிடித்துவைத்த வெறும் உயிருள்ள பதுமையே நைஜாம். எவ்வளவு விரைவில் அந்த ஆட்சிக்கு முடிவு காணப்படுகிறதோ, அவ்வளவும் அங்கு வதியும் மக்களுக்கு நன்மையேயாகும். ✲


## புதிய நூல்கள்

—✲—

| | |
|---|---|
| வீட்டிற்கோர் புத்தகசாலை | 0—2—0 |
| சமதர்மம் சி. என். எ. | 0—4—0 |
| மேடைப்பேச்சு சி. என். எ. | 0—2—0 |
| பெரிய இடத்துப்பெண் மு. கருணாநிதி. | 0—3—0 |
| பிள்ளையோ பிள்ளை மு. கருணாநிதி. | 0—6—0 |

தபாலில் பெற 0—0—9 தலைகள் கூடுதலாக அனுப்பிவைக்கவும்.

வியாபாரிகட்கு தக்க இலாபம் தரப்படும்.

விலாசங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்

P. B. 18. வேலூர், N. A.

# மறக்கமுடியாத நிகழ்ச்சி

அடுத்துக் கெடுக்கும் ஆகாத உள்ளத்தை, அவர் கொண்டிருக்கவில்லை. அரசியல் சூதாட்டம் அவர் அறிந்திராத வித்தை. சூழ்ச்சி, சதி இரண்டையும் அவர் தீண்டினது இல்லை. நினைத்ததை—நெஞ்சில் பட்டதை—எவர் விருப்பையும் வெறுப்பையும் பொருட்படுத்தாது-வெட்டொன்று துண்டு இரண்டு எனும் போக்கிலேயே அவர் சொல் இருந்துவந்தது. அவர் செயலிலும் ஒளிவு மறைவு கிடையாது.

அவர் முன்னிலையில் பதவி பணிந்தது. பட்டம் பதுங்கிற்று. பணம் ஓடி மறைந்தது. எதனாலும், அவர் உள்ளத்தில் எழுந்த எண்ணத்தை—ஆற்றிய செயலை — அழித்துவிட முடியவில்லை. நேர்மை—உறுதி—உண்மை—உழைப்பு இவ்வளவும் நிரம்பப் பெற்ற பெரியாராகவே அவர் வாழ்ந்து வந்தார்.

தாம் கண்ட கனவு நினைவாக, ஆளுவோரின் ஆணையை மீறினதுண்டா? சட்ட மறுப்புச் செய்தாரா? சிறைக் கோட்டம் நண்ணினாரா? தெகோல், டிவேலரா போன்று தூக்குமேடை ஏறவேண்டிய நிலை பெற்று, தப்பிப் பிழைக்கச் சில பல நடவடிக்கைகள் எடுததுக் கொண்டாரா? இவை ஒன்றேனும் அவர் கவனத்தை—கருத்தை ஈர்த்ததில்லை.

தம் இன மக்களின் அன்பைப் பெற, அவர் ஏதாவது தம் ஆடை அணிகளிலே மாற்றம் செய்து கொண்டதுண்டா? ஒரு துளியும் கிடையாது. எப்போதுமுள்ள ஆடை அலங்காரத்தோடுதான் இறக்கும் வரை இருந்துவந்தார். எடுத்ததெற்கெல்லாம் 'ஆண்டவன் திருநாம'த்தை பஜித்து, தமினமக்களிடம் ஏற்றம் பெற்றாரா? எதிரிகளும் இதனை ஒப்பார்.

தம்மின மக்களுக்கென, இந்தியத் துணைக்கண்டத்தில் தனிநாடு ஒன்று தோற்றுவித்த பெருமை, அவருக்கே உரித்தாகும். இதற்கு, வாள் பலமா? அணுகுண்டின் சக்தியா? அல்லது ஆத்மீக பலமா? எது காரணமென்பதை, பாரபட்சமற்ற சரித்திரக்காரர்கள்தான் முடிவு கட்ட வேண்டும்.

தம் வாழ்நாளில் என்றோ ஓர்நாள் அவர் கருத்திலே தோன்றியது இவ்வெண்ணம், ஏழாண்டுகளுக்கு முன்பு. இதனை வெளியிட்டார் உலகறிய. சிறிய கால அளவில் பெரியதோர் இஸ்லாமியஉலகை அமைத்துவிட்டார். இதுவரை உலக வரலாற்றிலே, இதுபோன்றதோர் சம்பவம் இடம் பெற்றிருக்கவில்லை. தேசியவாதியாகத்தான் அவரது அரசியல் வாழ்வு தொடங்கிற்று. துருக்கிக்குச் சாதகமாகத் தோற்றுவிக்கப்பட்ட கிலாபத் இயக்கத்திலும் பங்கு கொள்ள முடியாதென மறுத்துரைக்கும் அளவிற்கு, அவரது உள்ளம் தேசீயத்தில் தோய்ந்துபோய் இருந்தது. 'இந்து—முஸ்லீம் ஒற்றுமையின் தூதுவர்' என்று, சரோஜனி அம்மையாரே புகழ்மாலை சூட்டும் அளவிற்கு தேசீயம், அவர் உள்ளக் கோயிலில் குடிகொண்டிருந்தது. எவர் செய்த வினையின் விளைவாகவோ, அவர் முதல்தரமான 'வகுப்பு வாதி'யாகப் போய்விட்டார் பின்னர். இந்த மாற்றத்திற்கு, முழுதும் இவரே பொறுப்பாளி என்று எவரும் கூறார். சுற்றுச் சார்புகளே, அவரை மாற்றமுறச் செய்துவிட்டது.

அவருக்கு ஏற்பட்ட அளவிற்கு எதிர்ப்பு எவருக்கும் உலகில் இது வரை ஏற்பட்டதில்லை. பிறர் எதிர்ப்பு, அவருடைய இலட்சியத்தை விரைவில் கைகூடச் செய்துவிட்டது என்பது மிகையாகாது. பிறர் வீசிய வசை மொழி அனைத்தும், அவர் உள்ளத்தை உருக்குப்போல் மாற்றிவிட்டது.

வெற்றி கண்ட வீரராகவே அவர் முடிவெய்தினார் சென்ற வாரத்தில். அவர் பிரிவுக்கு வருத்தம் தெரிவிக்காத நாடோ, நல்லறிஞர்களோ உலகில் இல்லை. அவர் உயிரோடு இருந்த நாளில், அவர் கொள்கை பிடிக்காமல் கொதித்துக் கண்டித்தோர், சீற்றங் கொண்டு சீறி விழுந்தோர், கேலிச் சித்திரங்கள் தீட்டி மகிழ்ந்தோர் அனைவருமே, அன்று கொண்டிருந்த வெறுப்பை மறந்து, ஆவி துறந்தார் என்ற செய்தி கேட்டதும், தங்கள் தங்கள் அனுதாபத்தை—ஆழ்ந்த துக்கத்தை உலகறியக் காட்டிக்கொண்டனர். இருந்தாலும், 'தினசரி' ஆசிரியர் மட்டும் என்றும்போல் எரிமலையாக இருந்துவிட்டார். 'கல்லறையில் கேலி கூடா'தென நல்லறிஞர்கள் நவிலுவர். இந்நல்லுரையும் 'தினசரி' விஷயத்தில் பொய்த்துப் போய்விட்டது. அவர் நிலைக்குப் பரிதாபப்படுகிறோம்.

வழக்கறிஞர் ஜின்னா, முடிவில் தாம் கண்ட நாட்டின் கவர்னர் ஜெனரலாகப் பதவி பெற்று உயிர் துறந்தார் 11—9—48ல். அவருடைய ஆற்றலும், அறிவும் பாகிஸ்தானுக்கு மட்டுமல்லாமல், இந்திய யூனியன் அரசுக்கும் தேவைப்படும் இந்த நேரத்தில், அவர் பிரிந்தது இரு அரசுக்குமே ஈடு செய்யமுடியாத நஷ்டமாகும். இன்று இரு அரசுகளிடையேயும் மன ஒற்றுமை இல்லை. இந்த நிலை நீடிக்கவிடுவது இரு அரசின் குடிகளுக்குமே கேடு சூழக் கூடியது. இந்த நிலை மாறவேண்டும். அதுவும் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நற்பணியாகும். இரு அரசுகளிலும் நாடாளும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இனியாவது இத்துறையில் தங்கள் கருத்தைச் செலுத்துவது மிக மிகச் சிறந்ததாகும்.

பிறந்த எவரும் இறப்பது இயற்கை. பதவி, பட்டம், பணம் எதுவும் இறப்பைத் தடுத்துவிட முடியாது. ஜின்னாவும் அவ்வழியே சென்றுவிட்டார். அனுதாபம் தெரிவித்துக் கொண்ட ஒருவர் கூறினது போல், நபிநாயகத்திற்குப் பின்னர், எங்கும் எவரும் என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சியைத் தோற்றுவித்த ஜின்னாவிற்கு, நாமும் நமது கடைசி மரியாதையைச் செலுத்துவோமாக. ✽

---

**செங்கல்பட்டு அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டு**

**O. S. No. 32 of 1948.**

செல்வராஜு முதலியார்—வாதி
சேஷாத்திரி அய்யங்கார் வகையரு—
பிரதிவாதிகள்

திருவேங்கடாச்சாரியா 3-ம் பிரதிவாதி
வாசுதேவ முதலியார் 7-ம் ,,
கணேச முதலியார் 10-ம் ,,
தாண்டவராய முதலியார் 11-ம் ,,

மேற்படி கேசில் மேற்படி வாதி மேற்படி சேஷாத்திரி அய்யங்கார் வகையரு பேரில் சுவாதீன அடமானங்கள் மீட்டுக்கொள்ள தாவா செய்த மேற்படி கேசில் மேற்படி 3, 7, 10, 11, பிரதிவாதிகள் சம்மன் சர்வையாகாமல் இருப்பதால் மேற்படி பிரதிவாதிகள் மேற்படி தாவா விஷயமாய் விசாரணைக்கு வாய்தா 24—9—48-ல் போட்டிருக்கிறது என்பதை அறியவும். மேற்படி தேதியில் மேற்படி பிரதிவாதிகள் ஆஜராகத் தவறினால் மேற்படி யார்களை விசாரிக்காமலே தீர்ப்புகள் செய்யப்படும்.

செங்கல்பட்டு, 12-9-48. } சுந்தரவரதாச்சாரி, வக்கீல்.

# பணம் படைத்த பஞ்சை

—✻—

‘அவனொரு கஞ்சன்.’

‘அவனொரு லோபி.’

‘அவனொரு பித்தன்.’

‘அவனொரு பஞ்சை.’

இவ்வாறெல்லாம் கேலியும், கிண்டலும் செய்துவந்தனர் ஒருவனைப் பார்த்து.

தனித்தனியாக நூல்கள் தெரிகின்றமாதிரியில் அவனுடைய கோட்டு இருந்தது. செலு லாய்டில் ஆன உடைந்துபோன கழுத்துப் பட்டி. காலில் அணிந்திருந்த ஜோடுகளில் ஒன்று பழுப்பு, மற்றொன்று கருப்பு.

முதல் பார்வையிலேயே இவனது தோற்றம் நகைப்புக்குரியதாகவன்றோ இருந்திருக்கிறது? இவனைக் கண்டு மக்கள் சிரிப்பதிலும், நையாண்டி செய்வதிலும் தவறு என்ன இருக்கிறது?

அவனொரு பாத்திர வியாபாரி. தன் வீட்டின் வெளிப்புறத்தில் தான், அவன் எப்பொழுதும் வசித்துவந்தான்.

அவன் ஓர் வறுமையின் இருப்பிடம். எனவேதான் கந்தல் ஆடை அணிந்து, வெளிப்புறத்தில் வாழ்ந்தும் வருகிறான் என்று மக்கள் நம்பி வந்தனர். சில நாளைக்கு முன்னர் தான் அவன் செல்வ நிலையை உலகம் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

அவன் ஒரு ஆங்கிலேயன். எனோச் ஷோட் என்பது அவன் பெயர். இறக்கும்பொழுது அவன் வயது 82.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அவன் வறியவன் போல் உலகை நம்பச் செய்து வந்தான்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாகக் கம்பெனிப் பங்குகளை வாங்குவதும் விற்பதுமாகக் காலங்கழித்து வந்தான். இந்தத் தொழிலில் அவன் ஒரு மேதை என்று இப்பொழுது தெரிய வருகிறது.

அவன் இறந்த நான்கு மாதங்களுக்குப் பின்னர், அவன் எழுதி வைத்திருந்த ‘வில்’ பிரசுரமாகி இருக்கிறது. அவனுடைய சொத்து 4,22,000 ரூபாய் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

இதனைக்கண்ட மக்களுக்கு, முன்னிலும் அதிகமாகச் சிரிக்கத்தானே தோன்றும்!

✻

## நாடெங்கும்
# இந்தி எதிர்ப்பு அடையாள மறியல்

—

**சென்னையில்**

15—9—48-ல் சென்னையில் 51 பேர் கைதாகி மூன்று வாரச் சிறைத் தண்டனை பெற்றனர்.

**திருவண்ணாமலையில்**

நாற்பத்திரண்டு பேர் கைதாயினர்.

**தூத்துக்குடியில்**

தொண்ணூற்றைந்து பேர் கைதாயினர்.

**மதுரையில்**

இருபத்தொரு பேர் கைதாயினர்.

**திருக்கோயிலூரில்**

இருபத்தெட்டுப் பேர் கைதாயினர்.

**போளூர்**

தடியடிப் பிரயோகம் நடந்தது. 144 தடை உத்தரவு ஒரு மாதத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

**வந்தவாசி**

அமைதியாக மறியல் நடைபெற்றது. காலையில் 98 மாணவர்களும், மாலையில் 133 மாணவர்களும் பள்ளியை விட்டு வெளியேறினர்.

**முசிறி**

மறியல் செய்தோர் 21 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**விருதுநகர்**

21 தொண்டர் கைது ஆகி உள்ளனர்:

**காஞ்சிபுரம்**

43 தொண்டர்கள் மறியல் செய்தனர். காலையில் ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளி—பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி. மாலையில் பச்சையப்பன் துணைப் பள்ளி — முனிசிபல் பள்ளி.

**சேலம்**

மறியல் அமைதியாக ஆறு பள்ளிகளிலும் நடைபெற்றது.

**திருச்சி**

மூன்று பள்ளிகளில் மறியல் செய்யப்பட்டது.

பெரும்பாலான ஊர்களில் மறியல் செய்த தோழர்கள் கைது செய்யப் படவில்லை. எல்லா ஊர்களிலும் இந்தி எதிர்ப்பு அடையாள மறியல் மிகவும் அமைதியான முறையிலேயே நடைபெற்றது.

## நோட்டீஸ்
## செங்கல்பட்டு ஜில்லா ஜட்ஜி கோர்ட்டு

O. P. No. 31 of 1932.

In the matter of the Lunatic Doraisawmi Naidu,

M. P. No. 54 of 1948.

ரங்கநாயகி அம்மாள்— மனுதார்,
செல்லம்மாள்என்கிற அமிர்தம்மாள்
and 2 others—Respondents

ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா திருமங்கலத்திலிருக்கும் காலம்சென்ற பால கிருஷ்ணநாயுடு பாரியாள்,
குப்பம்மாள்—3rd Respondent.

ஷை 3rd Respondentக்கு தெரிவிக்கும் நோட்டீஸ்:—

ஷை Lunatic எஸ்டேட்டை 1, 2, Respondentகள் சரிவரப் பரிபாலனம் செய்யாமல் நேர்ந்திருக்கும் நஷ்ட தொகைகளை ஷை நெம்பரில் உங்கள் பர்த்தா பால கிருஷ்ணநாயுடு ஜாமீன் கொடுத்திருக்கும் சொத்துகள் மூலமாய் வசூல்செய்யவேணுமென்று ஷை மனுதார் மனு கொடுத்து ஷை மனு 24—9—1948-ல் வாய்தா போட்டிருக்கிறது. ஷை மனு விஷயமாய் உமக்கு ஏதாவது ஆக்ஷேபமிருந்தால் ஷை வாய்தா தினம் ஷை கோர்ட்டில் ஆஜராகி ஆக்ஷேபத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் கோர்ட்டார் ஒருதலைப்பக்ஷமாக தீர்மானம் செய்வார்கள் என்பதை அறியவும்.

இப்படிக்கு,

N, Ramanatha Iyer,

மனுதார் வக்கீல்.

Edited Printed & Puplished by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.